# பால்நிலை சமத்துவத்தை நோக்கிய ஆண்களின் பயணம்

பால்நிலை சமத்துவம். பெண்நிலைவாதம்
பற்றிய மூன்றாவது கண் நண்பர்களின்
புரிதலும் செயற்படுதலும் பற்றிய
கடந்த 10 வருடகால
அனுபவங்களின் பகிர்வு.



தொகுப்பாளர்:
ஜோ. கருணேந்திரா,
து.கௌரீஸ்வரன்,
சு.நிர்மலவாசன்,
சி.ஜெயசங்கர்,
கமலாவாசுகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்நிலை சமத்துவத்துக்கான
# ஆண்களின் பயணம்

தொகுப்பாளர்கள் பெயர்
ஜோ. கருணேந்திரா
து. கௌரீஸ்வரன்
சு. நிர்மலவாசன்
சி. ஜெயசங்கர்
கமலாவாசுகி

மூன்றாவது கண்
உள்ளூர் அறிவுத் திறன்
செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | பால்நிலை சமத்துவத்துக்கான ஆண்களின் பயணம் |
| விடயம் | : | பால்நிலை செயல்வாத ஆக்கங்கள் |
| ஆசிரியர் | : | தொகுப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | 16 மார்ச் 2014 |
| பக்கங்கள் | : | 92 |
| அளவு | : | A5 |
| பிரதிகள் | : | 500 |
| வெளியீட்டாளர்கள் | : | மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழு |
| அட்டை வடிவமைப்பு | : | சுசிமன் நிர்மலவாசன் |
| தொடர்பு | : | 30, பழைய வாடிவீட்டு வீதி, மட்டக்களப்பு |
| Blogspot | : | thirdeye2005.blogspot.com |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே.......

01. முன்னுரை

02. ஓயுமா? கவிதை - ச. ஸ்றீபன்

03. பால்நிலைச் சமத்துவம் நோக்கிய எனது பயணம்
- ஜோ. கருணேந்திரா

04. வேண்டாம் வேண்டாம் வேண்டாம் - செ.ஜோண்சன்

05. பெண்ணிலைச் சிந்தனைகள் என்னுள் வந்தவிதம்
ஓர் அனுபவப் பதிவு - துரை. கௌரீஸ்வரன்

06. ஓவியர் நிர்மலவாசனுடனான சந்திப்பு - கி. கலைமகள்

07. ஆளுமை கொண்ட ஆண்கள் பால்நிலை சமத்துவத்தை
உள்வாங்கி வாழ்பவர்கள் - சி. ஜெயசங்கர்

08. இச்செயற்பாடு பற்றி - செ. ஜோண்சன்

09. மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டு
நண்பர்கள் வட்டத்தின் பால்நிலைச் சமத்துவம் நோக்கிய
செயல்வாதப் பயணம் : புகைப்படக் கதை

10. மூன்று கவிதைகள் - மோ. குகதாஸ்

11. நியாயக் கும்மி - ஜோ. கருணேந்திரா

12. பெண்களுக்கெதிரான வன்முறைகளை முடிவுக்கு
கொண்டுவருதலை நோக்கிய எமது பாதையை நாமே
வடிவமைப்போம் - கமலா வாசுகி
மொழிபெயர்ப்பு - ஜோ. கருணேந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பால்நிலை சமத்துவத்துக்கான ஆண்களின் பயணம் ஒரு வாழ்க்கை நெறி. மூன்றாவது கண் நண்பர்களின் கடந்த 10 ஆண்டுகால வாழ்க்கைமுறை சார்ந்த அனுபவங்கள் பால்நிலை சமத்துவத்துக்கான பயில்வுகள், பகிர்வுகள், முன்னெடுப்புக்களில் அவர்களது பதிவுகள் முன்னெடுப்புக்களுக்கான அவர்களின் ஆக்கங்கள் என விடயங்கள் இங்கு தொகுக்கப்பட்டிருக்கின்றன.

மனித சமூகங்கள் எதிர் கொள்ளும் இனம், மதம், மொழி வர்க்கம் சாதி என்கின்ற எந்தவகையான முரண்பாடுகளிலும் போராட்டங்களிலும் அதன் இரு பக்கங்களிலும் ஆண்களின் இருப்பும் இயக்கமுமே இருந்து வருகின்றது. ஒடுக்குபவர் களாகவும் ஒடுக்கப்படுப வர்களாகவும் ஆண்களே தோற்றம் கொண்டிருப்பர். இதில் பெண்களது இடமும் குரலும் ஓரங்கட்டப்பட்டதாகவும் மௌனிக்கப்பட்டதாகவும் அல்லது பாதிக்கப்பட்டோராக காட்டப்படுவதன் ஊடாக ஆண்களின் தரப்புக்கு வலு சேர்ப்பவையாக வனையப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், முரண்பாடுகள் எல்லாவற்றுள்ளும் ஒடுக்கும் தரப்புள்ளும் ஒடுக்கப்படும் தரப்புள்ளும் பால்நிலை அடிப்படையில் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் பெண்களது இடம் பால்நிலை சமத்துவத்துக்கான முன்னெடுப்புக்களில் வெளிப்படையாக நேரடியாக அவர்களது குரலாக வெளிப்படுகின்றது. இத்தகைய பலமான பெண்நிலைவாத முன்னெப்புக்களுக்கு இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டம் களமாக இருந்துள்ளது. இந்த முன்னெடுப்புக்கள் எழுப்பிய கேள்விகளால் தூண்டப்பட்டு சமத்துவத்துக்கான தேடல்களைத் தொடங்கிய ஆண்கள் பலர் இம்மாவட்டத்தில் உள்ளனர். இவர்களுள் கலை இலக்கிய வெளிப்பாடுகள் ஊடாக சமத்துவத்துக்கான தேடலைத் தொடங்கிய மூன்றாவது கண் நண்பர்களது ஆக்கங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

அனைவரதும் சமத்துவத்துக்கான தீர்வு என்பது ஒருதரப்பினரது அதிகார விட்டுக்கொடுப்புகளுடனும், அதிகார பரவலாக்கத்துடனும் சார்ந்தது. இது மிகவும் சவாலானதும் சாதாரணமாக நடைமுறைச் சாத்தியமற்றதாகவும் ஏனைய முரண்பாடுகள் சார்ந்த விடயங்களில் இன்னமும் நிலவிவர பால்நிலை சமத்துவம் சார்ந்த விடயங்களில் மட்டும் ஆதிக்கநிலையைக் கொண்டிருக்கும் ஆண்கள் பலர் தமது அதிகாரத்தைக் கேள்வி கேட்கவும் மாற்றங்களளைக் கொண்டு வரவும் முயன்று வருவது உலகெங்கும் சிறியளவிலாவது நிகழ்ந்து வருகின்றன.

இந்த வகையிலேயே ஆண்களாக நாங்கள் கொண்டிருக்கின்ற ஆதிக்க நிலைகளில் இருந்து எங்களை விடுவித்துக் கொள்கின்ற தனிப்பட்ட மற்றும் தொழில்முறைசார் வாழ்க்கை முறைகளை நோக்கிய எங்களின் பயணம் பற்றிய பகிர்வாக இந்த தொகுப்பு அமையும்.

சி.ஜெயசங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓயுமா?

கடல் அலை ஓய்வதில்லை ....
இது இயற்கையின் நியதி.
பெண்கள் மீதான வன்முறை ஓய்வதில்லை ....
இது மனித நியதியா?

காற்று அடிப்பது ஓய்வதில்லை ....
இது இயற்கையின் நியதி
பெண்ணின் மீது விழும் அடி ஓய்வதில்லை ....
இது மனித நியதியா?

மழை பொழிவது இயற்கையின் நியதி.
பெண்ணின் மீது கெட்ட வார்த்தை பொழிவது
மனித நியதியா?

புள்ளி வைத்தால்
அது கோலத்தில் ஆரம்பம் ....
பெண்ணில் உடம்பில் சுடப்பட்ட
புள்ளி இருந்தால்
அது வன்முறையின் ஆரம்பமா ....
அல்லது அது அன்பு என்னும் பெயரில்
நடக்கும் ஆதிக்கமா?

**ச. ஸ்ரீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் - வேண்டாம் - வேண்டாம்

வேண்டாம் - வேண்டாம் - வேண்டாம்
வன்முறை வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும்
அன்பே வேண்டும்

வேண்டாம் - வேண்டாம் - வேண்டாம்
சந்தேகம் வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும்
நம்பிக்கை வேண்டும்

வேண்டாம் - வேண்டாம் - வேண்டாம்
சந்தேகம் வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும்
சந்தோசம் வேண்டும்

வேண்டாம் - வேண்டாம் - வேண்டாம்
வீட்டுள் அச்சங்கள் வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும்
வீட்டுள் அமைதியே வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம் - வேண்டாம் - வேண்டாம் சமமின்மை
வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும் சமநிலை வேண்டும்
லா லா . . . .
ஆகா ஆகா . . . .

வேண்டாம் - வேண்டாம் - வேண்டாம் அதிகாரம்
வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும் சமாதானம் வேண்டும்
லா லா . . . .
ஆகா ஆகா . . . .

வேண்டாம் - வேண்டாம் - வேண்டாம் சந்தேகம்
வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும் சந்தோசம் வேண்டும்
லா லா . . . .
ஆகா ஆகா . . . .

வேண்டாம் - வேண்டாம் - வேண்டாம் சடங்குகள்
வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும் சட்டங்கள் வேண்டும்
லா லா . . . .
ஆகா ஆகா . . . .

வேண்டாம் - வேண்டாம் - வேண்டாம் அச்சங்கள்
வேண்டாம்
வேண்டும் வேண்டும் வேண்டும் அமைதிகள் வேண்டும்
லா லா . . . .
ஆகா ஆகா . . . .

**செ. ஜோண்சன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்நிலைச் சமத்துவம் நோக்கிய எனது பயணம்

ஜோ. கருணேந்திரா.

ஆணாதிக்கச் சிந்தனையின் நிலைமாறாக் கருத்துப் படிமங்களினூடு கட்டமைக்கப்பட்டுள்ள எமது சமூகமானது பெண்கள் மீதான ஆதிக்கத்தை, அவர்களுக்கெதிரான வன்முறைகளை ஏற்றுக்கொள்வதற்கும், அங்கீகரிப்பதற்கும் ஏதுவாகக் காணப்படுகிறது. குறிப்பாக எமது சமூகமானது ஆண்களின் சமூகமாகவும், அவர்களின் சிந்தனைகளையே மிகப் பெரும்பாலும் உள்வாங்கியுள்ளது என்பதுவும் எவரும் மறுக்கமுடியாத உண்மையாகும். இவ்வாறு கட்டமைக்கப் பட்ட ஆணாதிக்க வரம்புகளுக்குட்பட்ட சமூக கட்டமைப்பிற்குட்பட்டே எனது வாழ்க்கையும் அமைந்திருந்தது. ஒரு ஆணாக என்னை நான் அடையாளப்படுத்துவதில் பெருமைப்பட்டுக் கொண்டேதான் இருந்தேன். சிறந்த கவனிப்பு, உடுப்புத் தோய்த்துத் தரும் அம்மா, சாப்பிட்ட பாத்திரத்தில் கைகழுவும் அப்பா என எனது குடும்ப அமைப்பும் என்னை சமூகம் எதிர்பார்க்கும் ஆணாக வளர்வதற்கு ஏதுவாக அமைந்திருந்தது.

இவ்வாறிருக்கையிலேயே, எனக்கிருந்த கலையார்வத்தினடிப்படையில் சி. ஜெயசங்கர் அவர்களின் நட்புக் கிடைத்ததும் தொடர்ச்சியாக பொழுதுபோக்காக சில பல கலைச் செயற்பாடுகளிலும், கலந்துரையாடல்களிலும் அவற்றினது முக்கியத்துவம் தெரியாமலேயே கலந்துகொள்ள ஆரம்பித்திருந்தேன். குறிப்பாக நான் எமது பிரதேசத்தின் சடங்குப் பாரம்பரியத்தினூடாக வளர்ந்தவனென்ற அடிப்படையில் சிறிது உடுக்கை வாசிக்கத் தெரிந்திருந்தது. அந்த அடிப்படையிலேயே நான் சில கலைச்செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கினேன். இது இவ்வாறு இருக்கையிலே, பல்வேறுபட்ட கலந்துரையாடல்களில் பங்குபற்ற வேண்டியிருந்ததன் காரணமாக உள்ளூர் அறிவுதிறன் சார்ந்து எனக்கு விளங்கக் கூடியதாகவும் அவை சார்ந்து செயற்படவும் ஆர்வம் ஏற்பட்டிருந்தது. இவ்வாறே மூன்றாவது கண் உள்ளூர் அறிவு, திறன் செயற்பாட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவுடனான எனது பயணம் 2002 ஆம் ஆண்டளவில் முழு வீச்சுடன் தொடங்கியது.

இது இவ்வாறிருக்கையில் ஜெயசங்கர் தனது முதுமானி பட்ட ஆய்விற்காக கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டினை சீலாமுனை பாரமபரிய கூத்துக் கலைஞர்களுடன் ஆரம்பித்திருந்தார். இப் பங்குகொள் ஆய்வுச் செயற்பாடு மிகவும் திறம்பட வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கையிலே கூத்து மீளுருவாக்கத்தில் பெண்நிலைவாதத்தின் தேவை உணரப்பட்டது.

அந்த அடிப்படையிலேயே இக்காலகட்டத்திலே எமது குழுவின் அமைப்பாளர்களுள் ஒருவரான கமலா வாசுகி அவர்களால் 2004 ஐப்பசி மாதத்தில் குழுவிற்கும் பாரம்பரிய கலைஞர்களுக்குமாகச் சேர்த்து பால்நிலை மற்றும் வன்முறைகள் சம்பந்தமான தொடர் களப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்தச் சந்தர்ப்பமே எனது வாழ்க்கை ஓட்டத்தை திசை திருப்பும் என்பதை நான் அப்போது அறிந்திருக்கவில்லை. இவ்வாறு வாசுகி அக்கா அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தொடர் களப்பயிற்சியினூடு நான் கற்றுக்கொண்ட, உணர்ந்துகொண்ட, புரிந்துகொண்ட விடயங்கள் ஏராளம். ஆணாதிக்கக் கட்டமைப்பிற்குட்பட்ட சமூகம் எதிர்பார்க்கும் ஒரு ஆணாக இச்சமூகத்தில் வாழ்வது பெண்களுக்கெதிரான மற்றும் ஜீவராசிகளுக்கெதிரான வன்முறைகளை ஏற்றுக்கொள்வதற்குச் சமமாக இருப்பதை என்னால் உணரக்கூடியதாக இருந்தது.

ஆயினும், இந்நிலையானது காலங்காலமாக கட்டமைக்கப்பட்டு இருக்கின்றமையையிட்டு இது சார்ந்து செயற்படவேண்டிய அவசியத்தையும் என்னால் புரிந்துகொள்ளக் கூடியதாகவிருந்தது. இதன் முதற்கட்டமாக, பால்நிலை சமத்துவத்தை என்னுடைய மட்டத்தில் ஏற்படுத்துவதற்கு நான் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதையும் இத்தொடர்க் களப்பயிற்சிகளினூடு புரிந்துகொண்டதன் அடிப்படையில், வீட்டிலே பெண் களுக்கென வகுக்கப்பட்டிருக்கும் சில வேலைகளில் எனது பங்களிப்பை வழங்க ஆரம்பித்திருந்தேன். இருந்தபோதும் ஆரம்பத்தில் அவை எனது பெற்றோராலும் சுற்றத்தவராலும் ஏற்றுக்கொள்ளப்படாதவைகளாகவே காணப்பட்டன. இவ்வாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நிலைச் சமத்துவத்திற்கான தேவையும் அவசியமும் என்னால் ஓரளவிற்குப் புரிந்துகொள் ளப்பட்டிருந்த வேளையிலேயே என்னில் ஏற்பட்ட மாற்றங்களின் வெளிப்பாடாக, மூன்றாவது கண் குழுவின் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாதத்தை இணைப்பாக்கம் செய்தேன்.

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக் கெதிரான ஆண்களின் செயல்வாதமானது கமலா வாசுகி அவர்களால் மூன்றாவது கண் நண்பர்களுக்கு மேற்கொண்ட தொடர் களப்பயிற்சியின் விளைவான பங்குபற்றல் செயற்பாட்டின் ஊடாக சி. ஜெயசங்கர் மற்றும் கமலா வாசுகி அவர்களால் "ஆண்களின் குரல்கள் ஆதரவுக் குரல்களே அன்றி மற்றுமொரு ஆதிக்கக் குரல்கள் அல்ல" எனும் தொனிப்பொருளில் வடிவமைக்கப்பட்ட வீதிநாடக அரங்காகப் பரிணமித்தது.

பலகாலமாக, பால்நிலை சமத்துவம் சார்ந்து பெண்களுடன் பெண்கள் அமைப்பக்களே இயங்கிக்கொண்டிருக்கின்றன. பெண்களை வலுப்படுத்தல், பெண்களுக்கான உரிமை தொடர்பாக விழிப்பூட்டல், பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான செயற்பாடுகள், பெண்களுக்கான சட்ட அனுசரனை என்பன தொடர்ச்சியாக பல்வேறு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்துகொண்டிருக்கும் சமயத்திலேயே மூன்றாவது கண் குழுவானது பால்நிலை தொடர்பாக ஆண்களுடனான செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது.

பால்நிலை என்பது வெறுமனே பெண்களோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல என்பதோடு சமூக ரீதியான பால்நிலை அமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வைக் களைவதற்கு பால்நிலை வன்முறைகளின் பங்காளர்களான ஆண்களும் உள்வாங்கப்படல் வேண்டும் என்பது ஆணித்தரமாக கலந்துரையாடப்பட்டு இச்செயல்வாதம் உருவாக்கப்பட்டது. இவ்வாறு வடிவமைக்கப்பட்ட இச்செயல்வாதமே இலங்கையிலேயே முதன்முறையாக பால்நிலை சமத்துவம் சார்ந்த ஆண்களின் செயல்வாதமாக உருவாகியது என்பது உண்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செயல்வாத உருவாக்கத்தின் போது பால்நிலை, பால்நிலை அதிகார உறவுகள் மற்றும் ஆணாதிக்கச் சிந்தனைகள் தொடர்பான மேலதிக விழிப்புணர்வு எனக்கு ஏற்பட்டதுடன் பால்நிலை அதிகார உறவுநிலை தொடர்பாக அதிருப்தியும் ஏற்பட்டது. இவ்வாறு என்னுள் ஏற்பட்ட சிந்தனை மாற்றத்தின் விளைவாக "நியாயக் கும்மி" எனும் தலைப்பில் சில கும்மிப் பாடல்களை நான் எழுதினேன். இவ்வாறு எழுதப்பட்ட கும்மிப் பாடல்கள் இன்றும் கூட எமது செயல்வாதத்தில் உள்வாங்கப்படப்பட்டு வருகிறது. அவ்வாறு எழுதப்பட்ட பாடல்களுள் சில உங்களுக்காக இங்கே :

சமமான உறவு தனைப்பேண - இங்கே
சமத்துவம் தானாய் வளர்ந்திடுமே
சமத்துவம் என்றே சொல்லும் போது
பால்நிலை என்பது முக்கியமே.

தந்தன தானன .....

ஆண்களும் பெண்களும் சரிசமமாய் - இந்த
பாரினில் உண்மையை ஏற்றுக் கொள்வீர்
பெண்களை அடிமையாய் பார்த்துவிட்டால் - இந்த
பூமியில் உண்மைகள் செத்துவிடும்

தந்தன தானன .....

பாலியல் வன்முறை நிற்கவேண்டும் - என்று
பாருலகெங்கிலும் கோசமுண்டு
பாலியல் வன்முறை நிற்கவில்லை - இந்த
பாருலகென்றோ மடிந்து போகும்.

தந்தன தானன .....

ஊரினில் சண்டைகள் வந்து விட்டால் - இந்த
ஊரார் அனைவரும் ஒன்று சேர்வர்
வீட்டிலே பெண்ணுக்கு அடிவிழுந்தால் - இங்கே
கேட்பதற்காருண்டு ஞானப் பெண்ணே

தந்தன தானன .....

பெண்களும் மனிதர்கள் என்று சொல்லி - நல்ல
மேன்மையை உலகுக்கு எடுத்துரைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் அடிமைத்தளை உடைக்க - இந்த
பூமியில் மாந்தர்கள் ஒன்று சேர்க.

தந்தன தானன .....

இவ்வாறு மற்றைய மூன்றாவது கண் நண்பர்களதும் படைப்புக்களையும் உள்வாங்கிக்கொண்டு உருவாக்கப்பட்ட செயல்வாத அரங்கானது, மட்டக்களப்பின் பல்வேறு பிரதேசங்களில் அளிக்கைசெய்யப்பட்டது. குறிப்பாக கெயார் (CARE) சர்வதேச நிறுவனத்தினது வேண்டு கோளுக்கிணங்க இந்த அரங்கானது மட்டக்களப்பில் 10 கிராமங்களில் அளிக்கை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், இவ்வாறு பல்வேறு இடங்களில் இவ் அளிக்கையினை மேற்கொண்டபோதே என்னால் யதார்த்த ரீதியாக பெண்களுக்கொதிரான வன்முறைகள் அவற்றின் வடிவங்கள் சார்ந்து ஆழமாகப் புரிந்துகொள்ளக் கூடியதாகவிருந்தது. குறிப்பாக வீட்டுவன்முறைகள் சார்ந்து என்னால் ஜீரணிக்க முடியாத பல உண்மைகளையும் அறியக்கூடியதாகவுமிருந்தது. அவற்றில் முக்கியமாக என்னால் கவனிக்கக்கூடியதாகவிருந்தது யதெனில் படித்த சமூகங்கள் எனக் கூறிக்கொண்டு நாங்கள் சந்தோசமாக வாழ்கிறோம் என நகர்ப்புறங்களில் வாழும் குடும்பங்களில் காணப்படும் வீட்டுவன்முறைகளாகும். பொதுவாக நகரங்களில் வாழும் நாம் கிராமத்தவர்களை மட்டம் தட்டிக்கொண்டு எங்கள் வீட்டுப் பிரச்சினைகளைப் பூசி மெழுகி விடுவோம். மற்றையவர்களுக்கே எமது அறிவுரைகளும் அனுதாபங்களும். ஆயினும், நகர்ப்புறங்களிலேயே பெண்கள் நான்கு சுவர்களுக்குள் இரு மடங்கு வன்முறைக்குட்படுத்தப்படுகின்றனர் என்பதுவும் அது மிகவும் கண்டிக்கப்படவேண்டியது என்ற சிந்தனையும் எனக்கு செயல்வாத அளிக்கைகளின் பின்னூட்டல்க ளிலேயே ஏற்பட்டது.

இவ்வாறு மூன்றாவது கண் செயற்பாட்டுக் குழுவின் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாதத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போதே எனக்கு கெயார் சர்வதேச நிறுவனத்தின் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைத் தடுத்தலுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்திட்டத்தில் வேலை செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. குறிப்பாக இவ் வாய்ப்பானது மூன்றாவது கண் குழுவில் செயற்பட்டதில் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையிலேயே அமைந்தது என்பது முற்றிலும் உண்மை. மேலும் இத்திட்டத்தினை கெயார் நிறுவனத்திற்காக இயக்கிக்கொண்டிருந்தவர் மூன்றாவது கண் குழுவின் இணைப்பாளர்களுள் ஒருவரான கமலா வாசுகி ஆவார். இத்திட்டத்தில் இணைந்து வேலை செய்ததன் மூலம் பால்நிலை, பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் சார்ந்து எனது அறிவும், சிந்தனையும் மிகவும் பரவலடைந்தது. பால்நிலை சமத்துவம் சம்பந்தமாக வேலைகளை முன்னெடுத்துவரும் பல்வேறு நபர்களின் தொடர்புகள் கிடைத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக பால்நிலை சமத்துவம் சார்ந்து இன்னும் வேகத்தோடு இயங்கவேண்டும், விடயங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் அதிகரித்தது.

இந்தக்கட்டத்திலே, ஏற்கனவே மூன்றாவது கண் குழுவில் பால்நிலை சார்ந்து ஆண்களின் செயல்வாதத்தில் ஈடுபட்டிருந்தமையின் அடிப்படையில் வாசுகி அக்கா அவர்களின் ஆலோசனைக்கிணங்க திட்டத்தின் ஒரு பகுதியான பால்நிலை சமத்துவத்தில் ஆண்களின் பங்களிப்பை அதிகரிக்கச்செய்வதற்கான செயற்பாடுகளில் கவனம் செலுத்தத்தொடங்கினேன்.

அந்தவகையிலே பல்வேறு கிராமங்களில் ஆண்கள் குழுக்களை ஒருங்கிணைப்பதும் பால்நிலை சமத்துவத்திற்கான தேவை பற்றி அவர்களுடன் கலந்துரையாடுவதுமாக எனது செயற்பாடுகள் விரிவடைந்திருந்தது. பால்நிலை சமத்துவம் சார்ந்து ஆண்களுடன் செயற்படுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. மூன்றாவது கண் குழுவின் ஆண்கள் செயல்வாதத்தில் செயற்பட்டமையின் அனுபவம் மற்றும் வாசுகி அக்கா அவர்களின் ஆலோசனை வழிநடத்தல் போன்றவற்றின் மூலம் பால்நிலை சார்ந்து ஆண்களுடனான செயற்பாட்டின் நோக்கத்தை சிறிதளவு அடையக்கூடியதாகவிருந்தது.

எமது பால்நிலைக் கட்டமைப்பானது இரு பாற்களுக் குமிடையில் ஏற்றத்தாழ்வுடன் கட்டமைக்கப்பட்டுள்ளமை நாம் யாவரும் அறிந்ததே. எமது சமூகம் ஆண்களின் பக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்தையும் பெண்களின் பக்கம் அடிமைத்தனத்தையும் ஊட்டி ஊட்டி வளர்த்திருக்கின்றது. தங்களது அதிகாரத்தைத் தணித்து பெண்களையும் சமமாக மதிக்க எத்தனை ஆண்கள் தயார்? இக் கேள்வியானது எழுப்பப்படும் முன்பே சிதறடிக்கப்படக்கூடியது. ஆயினும் அதிகாரம் என்பது வாழ்வின் நிம்மதியையும் சமாதானத்தையும் இல்லாமல்ச் செய்துவிடும் என்பதையும், வலி என்பது அனைத்து சீவராசிகளுக்கும் பொது என்பதையும் ஆண்களுக்குத் தெளிவுபடுத்துவதன் மூலம் ஆண்களுடனான செயற்பாட்டின் நோக்கத்தை சிறிதளவேனும் அடையக்கூடியதாகவிருந்தது.

இவை எல்லாவற்றிற்கும் மேலான விடயமாக நான் கருதுவது, பால்நிலை தொடர்பாக என்னுள் ஏற்பட்ட சிந்தனைத்தெளிவும் அது சார்ந்து எனது பழக்கவழக்கங்களில் ஏற்பட்ட மாற்றமுமாகும். பால்நிலைச் சமத்துவம் தொடர்பான வேலைகளில் ஆண்களை ஈடுபடுத்துவது கடினமாக இருக்கும் பட்சத்தில் நான் என்னுள் இது சார்ந்து ஏற்பட்ட மாற்றங்களை ஆண்களுடன் பகிர்தலும் மிகவும் தேவையாக இருந்தது. மேலும், பால்நிலைச் சமத்துவத்தை எம்மளவில் எம் வீடுகளிலேயே நாம் ஆரம்பிக்கவேண்டும். குறிப்பாபக வீடுகள் சாமாதானமாக இருக்கும் போதே நாம் வெளியுலக சமாதானத்தைப் பற்றிப் பேச முடியும் என்ற கருத்துக்கமையவே இந்த ஆண்களுடனான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டு வந்தது.

இந்த அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்ட பங்குபற்றல் செயற்பாடுகளினூடாக வீடுகளில் "நம்பிக்கை - சந்தோசம் - சமாதானம்" என்ற தொனிப்பொருளில் உருவாக்கப்பட்ட ஆண்களின் பிரச்சார நிகழ்வொன்று முதன்முறையாக கிராம மட்ட ஆண்களால் முன்னெடுக்கப்பட்டது. இது எனது வாழ்வின் முக்கிய படிப்பினையை உருவாக்கியது. அதாவது, பால்நிலைச் சமத்துவச் செயற்பாடுகளில் ஆண்களை உள்வாங்குதலானது ஒரு பாரிய விளைவை ஏற்படுத்தும் என்பதும், அது இன்றைய காலத்தின் மிக முக்கிய தேவை என்பதையும் எனக்கு உணர்த்தியது. மேலும் இச்செயற்பாடானது, மேற்கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களுடனான வேலைகளை விரிவு படுத்த எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து இம்மாதிரியான விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை கெயார் நிறுவன அனுசரணையோடு பல்வேறு கிராமங்களில் முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் எனக்கு ஏற்பட்டது.

இது இவ்வாறிருக்க எமது மூன்றாவது கண் குழுவின் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாதமும் தொடர்ந்துகொண்டிருந்தது. அந்தவகையில் மூன்றாவது கண் குழுவின் முக்கிய செயற்பாடுகளுள் ஒன்றான கூத்து மீளுருவாக்கச் செயற்பாடுகளில் பெண்நிலைவாதச் சிந்தனைகள் உள்வாங்கப்பட்டு பாரம்பரிக் கூத்துக்கள் மீளுருவாக்கப்பட்டமை முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஜெயசங்கர் அவர்களின் பாரம்பரிய அரங்கு மீதான பங்குகொள் ஆய்வுச்செயற்பாடான கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டின் முக்கிய அம்சமாக இந்த பெண்நிலைவாதச் சிந்தனைகள் உள்வாங்கப்பட்டு கூத்துப் பிரதிகள் மீளுருவாக்கப்பட்டமையானது முதன்மை பெறுகிறது.

மேலும், இச்செயல்வாதமானது பல்வேறு பரிமாணங்களைப் பெற்று மூன்றாவது கண் செயற்பாடுகளான சிறுவர் அரங்கச் செயற்பாடுகள், கல்வியியல் அரங்கச் செயற்பாடுகள் போன்றவற்றிலும் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பால்நிலை ஏற்றத்தாழ்வுகள் சார்ந்த ஆணாதிக்கச் சிந்தனைகளின் தகர்ப்பிற்கான செயற்பாடானது நான் எனது இடத்தில் எனக்கான மாற்றங்களையும் நான் சார்ந்தவர்களது மாற்றங்களையும் அடிப்படையாகவைத்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்திற்கமைவாகவே இன்றுவரை நான் எனது தளத்தில் சாத்தியமான இடங்களில், சந்தர்ப்பங்களில் பால்நிலை சமத்துவத்திற்கான செயற்பாடுகளில் பங்குபற்றிவருகிறேன். உதாரணமாக, 2009 தொடக்கம் 2013 வரை நான் வேலைசெய்த நிறுவனத்தில் அரச நிதிவழங்கும் திட்டங்களிற்கான முகாமையாளராக இருக்கின்றபோதிலும், எனது பால்நிலை சமத்துவம் சார்ந்த ஈடுபாட்டின் அடிப்படையில் நிறுவனத்தின் பால்நிலை ஆலோசகராக பல்வேறு திட்ட வடிவமைப்புகளுக்கான உள்ளீடுகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதிலும், ஏனைய உத்தியோகத்தர்களை பால்நிலை சமத்துவம் சார்ந்து அறிவூட்டுவதிலும் ஈடுபட்டு வந்தேன்.

மேலும் தற்போது சமூக ஒருமைப்பாட்டிற்கு வசதியளிக்கும் திட்டங்களுள் மிகவும் முக்கியமான திட்டமான ஜேர்மன் அரசால் இலங்கை அரசுக்கு தொழிநுட்ப உதவி வழங்கும் திட்டமான சமூக ஒருமைப்பாடு மற்றும் நிலைமாற்ற முன்னெடுப்புக்களுக்கு வசதியளித்தல் (குடுஜஊவு) திட்டத்தில் பணிபுரியம் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இத்திட்டத்தில் பால்நிலைச் சமத்துவம் மற்றும் சமூக ஒருமைப்பாடு சார்ந்து செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இச் செயல்வாத அனுபவம் எனக்கு மிகவும் துணைபுரிவதோடு எனது சிந்தனைகளும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக இவ்விதமான செயற்பாடுகளுக்கு உறுதுணையாகவும் அடிப்படையாகவும் காணப்படுவது மூன்றாவது கண் குழுவின் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாத அனுபவமேயாகும். மேலும் மிகமுக்கியமாக நான் குறிப்பிடவேண்டியது என்னவென்றால் எனது தொடர்ச்சியான செயற்பாடுகள் மற்றும் ஆர்வம் காரணமாக தொடர்ந்தும் மூன்றாவது கண் குழுவின் ஒரு இயங்குநிலை செயற்பாட்டாளனாக பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாதத்தில் இணைந்துள்ளமை எனக்கு மிக மனத்திருப்தியையும் பெருமையையும் அளிக்கிறது என்பதாகும்.

எனவே மாற்றம் என்பது நாம் நிற்கும் தளத்திலிருந்து எமது மாற்றத்திலிருந்தே மேற்கொள்ளப்படல் வேண்டும். அந்த அடிப்படையில் மூன்றாவது கண் குழுவின் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாதமானது என்னுள் பால்நிலை சமத்துவம் மற்றும் பால்நிலை அதிகார உறவுகள் சார்ந்து சிந்தனைத் தெளிவைத் திறம்பட தந்துள்ளதோடு, என்னை ஒரு செயல்வாதியாகவும் அடையாளப்படுத்தியுள்ளது. அந்த அடிப்படையில் சமூக விடுதலைக்கான பால்நிலைச் சமத்துவம் நோக்கிய எனது பயணமும் தொடர்ந்துகொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் உரிமை

கற்க வேண்டிய வயதில் . . . . .
கல்வியறிவு தேவையற்றவள் என்றும் .

விளையாட வேண்டிய பருவத்தில் . . .
வீட்டு வேலைபார்க்க வேண்டிய பருவம் என்றும்,

சுதந்திரமாய் இருக்கவேண்டிய காலத்தில் . . .
சுதந்திரம் தேவையற்றவள் என்றும்,

தலைநிமிர்ந்து கேட்கவேண்டிய அநீதிகளுக்கு
பெண் தகுதியற்றவள் என்றும் . . . .

பலதும் படித்துப் பட்டம் பெற்று பல படிகள் ஏறியபோதும்
கணவன் என்னும் புள்ளியில் வைத்து படியிறங்க வேண்டியவள்
என்றும்

சுகமான உலகிலி சுதந்திரமாய் உலவ வேண்டியவள்
இல்லறம் என்னும் கோவையில் அடக்கப்பட வேண்டியவள்
என்றும்

அமைதியின் சிகரங்கள் என்றும்
அடக்கத்தின் அதிபதிகள் என்றும் . . .
பணிவின் பதிகள் என்றும் . . .
ஒடுக்கத்தின் ஒளிகள் என்றும்

பெண்ணுக்கு வரைவிலக்கணம் கொடுத்துவிட்டது
இந்த சமூகம்.

பா. சுகந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணிலைச் சிந்தனைகள் என்னுள் வந்தவிதம் ஓர் அனுபவப் பதிவு.

துரை. கௌரீஸ்வரன்

நாம் வாழும் இந்த உலகத்தின் வரலாறானது எப்போதும் போராட்டங்களின் வரலாறாகவே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.
உலகத்தில் வாழும் மனிதர்கள் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்காக சதாகாலமும் போராடிக்கொண்டே இருக்கிறார்கள்.

இந்த மனித இயங்கியலைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கும்போது அறிவின் தொழிற்பாடு அதிகரிக்கத் தொடங்கிவிடும். மகிழ்ச்சிக்குத் தடையாக இருப்பது எது என்ற வினா மனதைக் குடையத் தொடங்கிவிடும். மனிதர்களின் மகிழ்வுக்காக இடம்பெற்ற நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் தேடுகின்ற அறிகின்ற ஆர்வங்கள் அதிகரிக்கும். உள்வீட்டுச் சமையலறை தொடங்கி உலகின் நடப்புக்கள் வரை பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களையும் பற்றி ஆராயும் மனோநிலை வளர்ச்சியுறும்.

இத்தகைய நிலைமைகள் மிகப்பெரும்பாலும் 17,18,19 வயதுக் கட்டங்களையடையும் போது சாதாரணமாக ஒரு மனிதரில் ஏற்படும் சிந்தனை வளர்ச்சியாக அமைந்திருக்கும். உலக வரலாற்றில் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங் களுக்காகப் புறப்பட்ட பல மனிதர்களுடைய வரலாறுகளை ஆராயும் போது அவர்களில் பெருமளவானோர் மேற்குறித்த வயதுக் கட்டங்களிலேயே போராடப் புறப்பட்டதை அறியமுடிகின்றது.

இத்தகைய சிந்தனைகள் மேற்படி வயதுக் கட்டங்களில் எனக்குள்ளும் ஏற்பட்டிருந்தன. இதன் காரணமாக உலக வரலாற்றில் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் போராட்டங்களில் ஈடுபட்ட மனிதர்கள் மீதான வசீகரம் அதிகரித்தது.

சேகுவேரா, மாட்டின்லூதர், மகாத்மாகாந்தி, சுபாஸ்சந்திரபோஸ், கோசிமின், லெனின், மாவோ சேதுங் எனப் பல விடுதலை வீரர்களைப் பற்றி அறியும் ஆர்வம் அதிகரித்தது.

இந்தத் தேடலில் உலகின் மனித விடுதலைக்கு ஒரே வழி வர்க்க விடுதலையினைச் சாத்தியப்படுத்துவ தேயாகும் எனும் மாக்ஸீய சித்தாந்தத்தின் மீது மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. உலக மக்களின் விடுதலைக்கான ஒரே மார்க்கம் மார்க்ஸீயமே என்ற நம்பிக்கை வலுவாகியது. விமர்சனங்களுக்கு அப்பால் நின்று மாக்ஸியத்தை ஆதரிக்கும் மனோநிலை அதிகரித்திருந்தது.

மாக்ஸீயத்தின் விஞ்ஞானபூர்வ அணுகு முறைகளைப் பற்றிய பெருமைகளைப் பேசிக்கொள்ளும், மார்க்ஸீயத்தினால் உந்தப்பட்டு இடம்பெற்ற ஒக்டோபர் புரட்சி, சீனப்புரட்சி, வியட்னாம் யுத்தம், மாவோவின் நீண்டபயணம், கியூபப் புரட்சி பற்றிய மேலோட்டான பெருமைகளைப் பற்றியெல்லாம் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கும் (கணணியில் யுத்தம் செய்துவிளையாடுவதைப் போல்) நிலைமை அதிகரித்து வந்தது.

சுருங்கச் சொன்னால் இந்த உலகமக்களின் விடுதலைக்கான மார்க்கம் மார்க்ஸீயம் ஊடாகவே இடம்பெற முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை என்னுள் திடமாக உருவாகியிருந்தது என்பேன்.

இத்தகைய பின்னணியில் ஓர் அரங்கியல் மாணவனாக பட்டப்படிப்பினைத் தொடங்கிய சூழலில் (2002.2003) பாரம்பரிய அரங்கில் முக்கியமான ஆராய்ச்சிச் செயற்பாட்டில் ஆய்வாளரின் உதவியாளராக ஈடுபடும் வாய்ப்பு வாய்க்கப்பெற்றது. (சீலாமுனையில் விரிவுரையாளர் சி.ஜெயசங்கர் அவர்களால் 2002.2003 களில் மேற்கொள்ளப்பட்ட கூத்து மீளுருவாக்கத் திற்கான பங்குகொள் ஆய்வு) இக் கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வுச் செயற்பாட்டில் பங்குபற்றியதன் மூலம் பெண்ணிலைவாதச் சிந்தனைகளை அறிந்துகொள்ளும் வாய்ப்புக்கள் எனக்குக் கிடைக்கப்பெற்றன.

கூத்து மீளுருவாக்கம் பெண்ணிலைவாதம் பற்றிய அறிமுகத்தை வழங்கியதுடன் மனித விடுதலை பற்றிச் சிந்திக்கும்போது அதில் பெண்ணிலைச் சிந்தனைகளை உள்வாங்க வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து கொள்ளும் அறிவினை ஊட்டியது.

கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டினைத் தொடர்ந்து 2004 ஆம் வருடம் வாரத்தின் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மூன்றாவதுகண் நண்பர்களுடன் பெண்ணிலைவாதச் சிந்தனைகள் பெண்ணிலைவாதச் செயற்பாடுகள் தொடர்பாக தொடர்ச்சியான களப்பயிற்சிகளைத் திருமதி வாசுகி ஜெயசங்கர் (கமலாவாசுகி) அவர்கள் மேற்கொண்டு வந்தார். பெண்ணிலைவாதத்தினை நடைமுறைக்குக் கொண்டுவர பெண்ணிலைச் சிந்தனைகளின் பெறுமதியினை அறிந்து உணர்ந்து வாழும் ஆண்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கிக் கொள்ளுதல் அடிப்படையானது என்ற நோக்குடன் அதனை நடைமுறைச் சாத்தியமாக்கும் திட நம்பிக்கையுடன் விசேடமாக மூன்றாவது கண் குழுவில் சேர்ந்து செயற்பட்ட ஆண்களை மையமாகக் கொண்டு இத்திட்டத்தினை திருமதி. கமலாவாசுகி அவர்கள் மேற்கொண்டு வந்தார்.

கூத்து மீளுருவாக்கத்திற்கான ஆய்வுச் செயற்பாட்டில் பங்கு பற்றிய இளைஞர்கள் மத்தியில் உள்வாங்கப்பட்டிருந்த பெண்ணிலைச் சிந்தனைகளின் புரிந்துகொள்ளல் பற்றிய அவதானம் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளை எதிர்க்கின்ற ஆண்கள் குழுவினை உருவாக்குவதற்கான நம்பிக்கையினையும் மனோதிடத்தையும் வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்ணிலைவாத நிலைநின்று நடத்தப்பட்ட இக்களப்பயிற்சியின் மூலம் நான் கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டினூடாக உள்வாங்கிய பெண்ணிலைவாதச் சிந்தனைகளை மென்மேலும் ஆழமாகவும் தெளிவாகவும் அறிந்து விளங்கி வாழ்வதற்கு கால்கோளிட்டது என்பேன்.

சிறுவர்கள் முதல் வளர்ந்தவர்கள் வரை பல தரப்பட்டவர்களும் வீட்டு முற்றங்களிலும் கூத்துக்கள் பயிலும் மர நிழல்களிலும் ஒன்று கூடி மகிழ்வாகவும் உற்சாகமாகவும் கலைப் படைப்பாக்கங்களை வெளிப்படுத்திய வாறு கலந்து கொண்ட களப்பயிற்சிகளாக இவை இடம்பெற்றிருந்தன.

கருத்துக்களும் எண்ணக்கருக்களும் தெளிவாக உணர்த்தப்பட்டதால் அவற்றின் வெளியீடுகளாக ஆக்க பூர்வமான பாடல்களும், கவிதைகளும், கட்டுரைகளும் பங்குபற்றுனர்களுடாக வெளிவரத்தொடங்கின. "சிந்தனை மனிதரைப் பற்றும் பொழுது அது பௌதீக சக்தியாக வடிவமெடுக்கும்" என்ற கார்ள்மாக்ஸின் கூற்றிற்கிணங்க கமலா வாசுகியின் களப்பயிற்சிதந்த பெண்ணிலைச் சிந்தனைகள் கலைப்படைப்புக்களாக ஆண்களால் உருவாக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களப்பயிற்சி தந்த அறிவும் அனுபவங்களும் அதன் விளைவான கலையாக்கங்களையும் ஒன்றிணைத்து பொது வெளியில் உரையாடுவதற்காக ஒரு தெருவெளி அரங்க ஆற்றுகை உருவாக்கம் பெற்றது. இவ்வரங்க ஆற்றுகை பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான ஆண்கள் குழுவின் செயல்வாத அரங்காக அறிமுகம் செய்யப்பட்டது.

இதனூடாக செயல்வாத அரங்கு என்பது ஆக்கபூர்வமான மாற்றங்களுக்கான செயற்பாட்டாளர்களின் அரங்கு என்பது வலியுறுத்தப்பட்டது. அதாவது இந்த அரங்கில் பங்குபற்றுவோர் தாம் கூறும் விடயத்தினைத் தமது வாழ்வில் நடைமுறைப் படுத்துனர்களாக இருக்க வேண்டும் என்பது மிகவும் அடிப்படையானதாகக் கொள்ளப்பட்டது. "சாத்தான்கள் வேதம் ஓதும்", "படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்" போன்ற பண்புகள் கொண்ட அரங்குகளுக்கு முற்றிலும் மாறுபட்ட ஓர் அரங்கவடிவமாக இச் செயல்வாத அரங்கு முன்னெடுக்கப்பட்டது. முன்மொழியப்பட்டது.

பங்குபற்றுனர்களிடையே ஆக்கபூர்வமான மாற்றங்களைக் கொண்டு வரும் உத்திகளைக் கொண்ட அரங்கச் செயல்வாதமாக இச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. பால்நிலைச் சமத்துவத்திற்கான சிந்தனைகளைப் பரவலாக்கி நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான அரங்கச் செயலாக இது பரிணாமம் பெற்றது.

ஆண்களால் வெளியிடப்பட்ட இந்தக் குரல்கள் ஆதரவுக் குரல்களேயன்றி ஒருபோதும் மற்றுமொரு ஆதிக்கக் குரல்களாக மாறிவிடமாட்டாது என்பதில் ஆண்கள் மிகவும் தெளிவுடன் இயங்குவதற்கான, செயலாற்றுவதற்கான அறிவு இக்களப் பயிற்சியில் வழங்கப்பட்டிருந்தது. நடைமுறைச் சாத்தியத்திற்குரிய பால்நிலைக் கற்கைகளுக்கான உபாயமாக இவ்வரங்க உருவாக்கச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

எழுத, வாசிக்கத் தெரியாதவர்களும் எழுத்தறிவுள்ளவர்களும் வேறுபாடுகளற்ற முறையில் சேர்ந்தியங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்து அறியும், எண்ணங்களைப் பகிரும் கற்கைவெளியாக இச்செயல்வாத அரங்கு நடைபெற்றிருந்தது. எப்படி ஒரு அரங்க விளையாட்டினை விளையாடும் போது மகிழ்ச்சியுடன் எமக்கு வேண்டிய திறன்களை விருத்தி செய்து கொள்கின்றோமோ அதேபோல் இச் செயல்வாத அரங்கிற்கான களப்பயிற்சி களூடாக நாம் மகிழ்வான வாழ்வுக்குரிய பெண்ணிலை வாதச் சிந்தனைகளை நடைமுறைப் பிரயோகத்திற்குரிய வகையில் பெற்றுக்கொள்ள முடிந்தது.

மனிதகுலத்தின் நிலையான நிம்மதியான மகிழ்வான தன்னிறைவான சமத்துவமான வாழ்விற்குரிய வழிகாட்டும் சிந்தனைகளாக பெண்ணிலைச் சிந்தனைகள் உள்ளன என்பதை தெளிவாக விளங்கிக்கொள்ள முடிந்தது. அதாவது பெண்ணிலைவாதம் அதிகாரத்திற்கு எதிரான, அழித்தொழிப்புக்களுக்கு எதிரான, சுரண்டலுக்கு எதிரான, ஒவ்வொரு உயிரின் பெறுமதியையும் மதிக்கும் மனிதமுகத்தைக் கொண்ட சிந்தனைகளின் தொகுதியாக உள்ளது என்பதனை விளங்கிக் கொண்டோம்.

இந்த உலகத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக இடம்பெற்ற போராட்டங்கள் பலவும் ஒரு கட்டத்தில் மற்றொரு ஒடுக்குமுறையாக மாறிச் சின்னாபின்னப்பட்டதற்குரிய அடிப்படைக் காரணங்களுள் ஒன்று அவைகள் பெண்ணிலைச் சிந்தனைகளை உள்வாங்காமையே ஆகும் என்ற உறைப்பான உண்மையினை உணர்ந்துகொள்ள இக்களப்பயிற்சி காரணமாக இருந்தது.

மனிதர்களின் விடுதலைக்கான பெண்ணிலை வாதிகளின் போராட்டம் என்பது வன்முறையற்றவகையில் ஒடுக்கும் தரப்பினரையும் மனிதராக மதித்து அவர்களையும் மனிதவிடுதலைக்கான நீதியான போராட்டக்காரர்களாக மாற்றும் நோக்கங்களுடன் கூடிய தொடர் செயற்பாடுகளாகும் என்பதை விளங்கிக் கொண்டோம்.

ஒவ்வொரு ஆண் பிள்ளைகளையும் சமநிலையற்ற தன்மைகளிலிருந்தும் வன்முறைமிக்க மனோநிலைக்கு மாற்றமுறச் செய்வதிலிருந்தும் விடுவித்து உண்மையான முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவான ஆளுமைகளாக உருவாக்குவதற்கான வாழ்க்கை நெறியாக பெண்ணிலைச் சிந்தனைகள் கூறும் வாழ்வியல் முறைகள் உள்ளன என்பது முக்கியமாகும். மனிதர்களின் மகிழ்வானவாழ்விற்கு இட்டுச்செல்லும் வாழ்க்கைத் தத்துவமாக பெண்ணியச் சிந்தனைகள் இருந்து வருகின்றன.

இந்த உலகம் எதிர்நோக்கும் சகல விதமான பிரச்சினைகளிலிருந்தும் சேதாரங்களின்றி விடுதலை பெறுவதற்கான வழிமுறைகள் பெண்ணிலைச் சிந்தனைகளூடாக வலியுறுத்தப்பட்டுள்ளன. இச்சிந்தனைகள் அனைத்தும் உலகம் எங்கும் வாழ்ந்துவரும் பல்லாயிரக்கணக்கான பெண்ணிலை வாதச் செயற்பாட்டாளர்களின் தொடர்ச்சியான அயராத செயற்பாடுகளூடாகக் கண்டறியப்பட்ட உண்மைகளாக உள்ளன.

"தத்துவவாதிகளோ உலகத்தைப் பற்றி விபரிக்கிறார்கள் நாமோ உலகத்தை மாற்றுவதற்காக முயலுகின்றோம்" என கார்ள்மாக்ஸ் கூறியுள்ளார். உண்மையில் உலகத்தை கார்ள்மார்க்ஸ் எதிர்பார்த்த மனித சமத்துவத்திற்குரியவாறு மாற்றுவதற்காக பெண்ணிலைவாதிகள் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதே இன்றைய யதார்த்தமாகும். இவர்கள் ஊடகங்கள் போற்றும் பிரபல்யம் மிக்க விடுதலைப் போராளிகளாகவன்றி சாதாரண மனிதர்களாக வாழ்ந்து கொண்டே மாற்றத்திற்காக கணந்தோறும் செயலாற்றிக் கொண்டுள்ளனர்.

"ஊரில் நல்லவர்கள் ஒருசிலர் வாழ்வதால்தான் மழை பெய்கின்றது" என்று ஒரு முதுமொழியுண்டு. அது சரியோ பிழையோ- ஆனால் ஏகாதிபத்திய வல்லரசுகள் கோலோச்சும் ஆபத்துக்கள் அதிகரித்த இந்த உலகில் மனித உரிமைகளும் வாழ்வுரிமைகளும் குறைந்தபட்சமேனும் உறுதிப்படுத்தப் படுவதற்கு முகமறியாத பல்லாயிரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணியச் செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகளே காரணங்களாக இருந்து வருகின்றன என்பது மட்டும் உண்மையாகும்.

இத்தகைய உலகந் தழுவிய பெண்ணியச் செயற்பாடுகளுள் ஒன்றுதான் நாங்கள் பங்குபற்றும் செயல்வாத அரங்கக் களப்பயிற்சிகளும் அவற்றின் முன்னெடுப்புக்களும் ஆகும்.

2004 இல் மூன்றாவதுகண் நண்பர்களிடையே நடத்தப்பட்ட பெண்ணிலைவாதக் களப்பயிற்சியின் பின்னர் அது எனக்கு வழங்கிய அறிவும் அதிர்வுகளும் பெண்ணிய நோக்குடன் பல்வேறு விடயங்களையும் பார்க்கும் மனோநிலையினை ஏற்படுத்திவிட்டுள்ளது. பெண்ணிலை நின்று பார்க்காத எந்தவொரு விடயமும் குறைபாடு டையதாகவே தெரிகின்றது.

மனிதன் என்று பொதுவாகக் கூற முடியாதுள்ளது. மனிதன் மனிதன் என்று எழுதப்பட்டுள்ள எழுத்துக்களைப் பார்க்கும் போது அதன் மீது வெறுப்புணர்வு ஏற்படுகின்றது. நிறைவற்றதாகவே அந்த எழுத்துக்களை மனது கருதுகின்றது. சந்திரனில் உள்ள களங்கம் போலவே சில பெறுமதியான நூல்களிலுள்ள மனிதன் மட்டுமான பதிவு எனக்குக் காட்சியளிக்கின்றது. மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது மனுசியை மறந்து மனிதனை மட்டும் பொதுமைப்படுத்திக் கூறுவதற்கு எனது நாக்குத் தயங்குகின்றது. மனுசியை உள்ளடக்கிய மனிதன் என்ற சொல்லினை எழுத என் கைகள் பின்நிற்கின்றன.

நான் ஒரு ஆசிரியராக மாணவர்களின் எழுத்துக்களை வாசிக்கும் போது மனிதன் என்று எழுதப்பட்டிருந்தால் ஆண்கள் மட்டுந்தானா உள்ளனர் பெண்கள் இல்லையா? ஏன் பெண்களைக் குறிப்பிடவில்லை என்று கேள்விகளை எழுப்பி மாணவர்களுடன் ஆக்கபூர்வமாக உரையாடி வருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுடன் களப்பயிற்சிகளை நடத்தும் போது பால்நிலைச் சமத்துவத்திற்கான செயற்பாடுகளைக் கவனத்தில் கொண்டு வருகின்றேன். பால்நிலைப் பாகுபாடு சிறுவயதிலிருந்தே ஊட்டப்படுவதால் சிறுவர்களுடன் சிறுவர் நாடக அரங்கச் செயல்களில் ஈடுபடும் போது அதில் பால்நிலைச் சமத்துவத்திற்கான எண்ணக்கருக்களை விதைத்தல், நடத்தைகளைப் பயிற்றுவித்தல் எனது நோக்கமாக இருந்து வருகின்றது.

ஏதிர்காலத்தில் வன்முறையற்ற சிறந்த அப்பாமார்களை உருவாக்கவேண்டியது ஒரு ஆசிரியரின் பிரதான கடமையாகும் ஏனெனில் இன்று மிகப்பெரும்பாலும் அப்பாமார்களாலேயே குடும்பங்கள் சீரழிந்து குடும்ப வன்முறைகள் பெருகி மனிதரிடையே மனச் சமாதானம் சூனியமாகி வருகின்றது. எதிர்காலத்தில் நாட்டில் சமாதானம் உறுதிப்படுத்தப்படுவதற்கு குடும்பங்களில் சமாதானம் நிலைநிறுத்தப்படுவது அடிப்படையானது. எனவே குறிப்பாக ஆண் பிள்ளைகளைக் கருத்திற்கொண்டு அவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்கும் நோக்குடன் எனது ஆசிரியப் பணியினைச் செய்து வருகின்றேன்.

நாம் இதுவரைஅறிந்த நம்பிய கொண்டாடிய பல்வேறு விடயங்களையும் பெண்ணிலைப் பார்வை களுடன் கட்டவிழ்த்துப் பார்க்கும் பார்வைப் போக்கு அதிகரித்துள்ளது. எந்தவொரு செயற்பாடுகளிலும் ஆழ இழையோடும் பால்நிலைப் பாராபட்சங்களைத் தேடும் நுண்ணாய்வுப் பாங்கு வளர்ந்துள்ளது.

நமது சூழலில் மிகப் பெரும்பாலும் உருவத்தில் பெண்ணாகவும் கருத்தியலில் ஆணாதிக்கச் சிந்தனைகளோடும் வாழும் நபர்களை இனங்காண இக்களப்பயிற்சி அறிவூட்டியது. இது பெண்கள்தானே பெண்களுக்கு எதிரி என்று ஆணாதிக்கம் கூறும் வாதத்தின் பொய்மையை தெளிவாக விளங்கிட வைத்தது. ஆணாதிக்கச் சிந்தனைகளைக் கடத்துபவர்களாக பெண்கள் வடிவமைக்கப்பட்டுள்ள வரலாற்றினைக் கட்டவிழ்த்துக் காட்டியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வெள்ளை" ஓவியக் கண்காட்சியில் நிர்மலவாசனுடனான சந்திப்பு

**கி.கலைமகள்**



பொன்குஞ்சு
தைலவர்ணம்
2005



வெள்ளை நிலமும், பெண்களும்
தாபனக்கலை - 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உங்களது ஓவியங்களில் நீங்கள் வெளிப்படுத்துகின்ற பெண்களின் சித்தரிப்பு பற்றிச் சொல்ல முடியுமா?**

பொம்பிளைகள கீறுறன். பிரச்சினைகளோட இருக்கிறத விளங்கித்தான் கீறுறனே தவிர பிரச்சனைக்குள்ள இருக்கிற அடி ஆழத்தன்மை உணர்ந்த வலியோட கீறினனோ தெரியல. அறஞ்சா வலிக்குமெண்டு தெரியும். ஆனா அறவாங்கினவருதான் வலிய உணருவாரு. அறவாங்கினவருக்கும் பாக்கிறவருக்கும் வித்தியாசம் இருக்கலாம். இன்னும் பலமா பொம்பிளை ஓவியர்கள், முகத்தில அறஞ்சமாதிரி கீற வெளிக்குடக்குள்ளதான் தெரியும். பெண் பிரச்சன விளங்கிக் கீறுற பெண் ஓவியர்களுக்கும் எனக்குமுள்ள இடைவெளி. அதுக்கு நிறையபொம்பிளைகள் பிரச்சினைகளை உள்வாங்கிக் கீறத்தொடங்கணும். வாசுகி அக்காவோட painting, cartoon பாக்கக்குள்ள ஆச்சரியமாயிருக்கும். அவ பொம்பிள்ளையா இருந்து கீறுறாவு என்பது விளங்கும். அப்பத்தான் நான் யோசிப்பன் நான் இத இப்படி யோசிக்கலயே எண்டு.

**உங்கட ஓவிய ஆக்கங்களின் நோக்கம் முழுக்க முழுக்க பெண்களுடைய விடயங்களைப் பேசுவதா?**

என்ட படத்தில பெண்களுக்கு கதைக்கிறதும் இருக்கும். அதோட நான் வேற வேற கதைகளும் கதைப்பன். இதையும் நான் கதைப்பன். பெண்கள் பற்றிக் கதைக்கக்குள்ள நானும் ஒருவரா இருப்பன்.

**உங்களது ஓவியங்ளில் வரும் பெண்கள் முகங்கள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்ட முகங்களாத்தோணுது. இந்த முகங்கள் ஏனைய ஓவியர்களின் பெண்முகங் களிலிருந்து வேறுபடுகின்றது.**

சினிமா காட்டுற பெண்கள் ஆண்கள் விரும்பும் பெண்கள். ஆண்கள் கண்டுபிடிச்ச உடுப்புக்களோடு இருக்கும் ஆண்கள் விரும்பிற மாதிரியான பெண்கள். இது அழகென்று நினைக்கிற பொதுவானதொரு பார்வை எங்களுக்கு இருக்குது. இப்படியாக இருக்காத பெண்கள் எல்லாம் கவனத்தில் கொள்ளப்படாத பெண்கள். அழகில்ல எண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்படுற பெண்கள். என்ன அழகென்று எங்களால வரைவிலக்கணம் கொடுக்காட்டியும் ஒரு எண்ணமொண்டு இருக்குதானே.வெள்ளத் தோல் மெலிந்த உடல் இது பொதுப்படை ஒழுங்கெண்டு நமக்கு காட்டுற வரைவிலக்கணம்.இந்த பிறேமுக்குள்ள அடக்கப்படாத அவங்கள படமாக்கக்குள்ள வாற பெண்கள்,எங்கட ஊர்களில் இருக்கிற சாதாரண அம்மாக்களிட முகங்கள்தான்அது. இப்படி நாங்க அழகு எண்டு கண்டுபிடிக்கிற முகங்கள் சரியான அரிது. அத வரையவேண்டும் என்ற தேவை எனக்கு இருக்கல்ல. ஆனா உலகத்தில கீறப்படுற ஏராளமான ஓவியங்களில் பொம்பிளைகள அப்படித்தான் கீறப்பட்டு வந்திருக்கு அது மொனாலிசாகாலத்துக்கு முந்தியிருந்தே அப்படித்தான் தொடச்சியா இன்டைக்குவரைக்கும் ஒரு பக்கத்தால் அப்படித்தான் வந்திருக்கு. பொம்பிளைகள் கிறத்தொடங்க வித்தியாசம் டக்கெண்டு தெரியுது

 **One Billion பெண்கள் எழுச்சியில் "கொடிக்கயிற்றில் தொங்கும் பெண் முகங்கள்" பல உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. பெண்கள் இருப்பற்றவர்கள் எண்டும் யோசிக்க வைக்குது. இதன் உருவாக்கத்தின் பின்புலம் பற்றிச் சொல்ல முடியுமா?**

ஓராயிரம் கோடி பெண்கள் எழுச்சில ஏதாவது செய்யனும் என்ட எண்ணம் இருந்திட்டே இருந்தது.கொடில காயுற உடுப்புகள் வெயிலிலேயும் சிலவேள மழையிலையுமாவெந்தும், நனஞ்சுமா கிடக்கும். உடுப்புக்கள் திரும்பி திரும்பி கழுவி சாயம் போய் நொந்துபோய்க்கிடக்கும். துணிகள் அவிச்சு வெளுக்கிற முறைகளும் நம்மளிட்டஇருக்கு. இதோட பெண்கள தொடர்பு படுத்தி இருக்கன் . ஒரு கதையோடுதான் கீறத் தொடங்கிறன்.ஆனா நான் ஆழமா கதைய தேடித்தேடி கண்டுபிடிச்சி சொல்ல விரும்பிறல்ல கத தேடினா படம் பார்க்க ஏலாமப் போயிடும்.

நாங்க நிறையக்கதைகள் உருவாக்கலாம். அர்த்தப் பாடுகளை விளங்கப்படுத்தக்குள்ள சின்ன அர்த்தப்பாடாகப் போயிடுமோ என்ட பயம். ஆனா எனக்குள்ள இருக்கிறது பிரமாண்டமான பார்வையாய் இருக்கும். பிரமாண்டமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு கதச்சி குறச்சிப் போட்டுறுமோ எண்டு பயம் இருக்கும். துணிய அடிக்கக்குள்ளஅடிக்கக்குள்ள வெளுத்துப் போறமாதிரி.

ஆனால் அது நிறையக் கதைகள ஞாபகப்படுத்தி நிற்குது. ஓம் ஒவ்வொராள்ட வாசிப்பபொறுத்து கதைகள் கூடிக்குறையும் தொங்கிற முகங்களுக்கு ஒருகதை மழைக்குள்ளேயும் வெயிலுக்குள்ளேயும் கிடக்கக்குள்ள ஒரு கத. எல்லோரும் பார்க்க ரோட்டால பொம்பிளைகளே தூக்கித்துப் போகக்குள்ள அது கனக்ககதை கதைக்கும். இயற்க்கைக்கும் கலைப் படைப்பிற்குமான தொடர்பு அது. வெயில காயக்குள்ள ஒரு கத காற்றடிச்சிப் பறக்கக்குள்ள ஒரு கத. ஆம்பிள தூக்கிப் போனா ஒரு கத. வேறவேற அர்த்தப்பாடுகள் அது தரும். ரோட்டில சொன்ன கதைக்கும் பொம்பிள்ளைகள் சைன் பண்ணக்குள்ள சொன்ன கதைக்கும் கண்காட்சி அறையில் சொன்ன கதைக்கும் வித்தியாசம் இருக்கும். வெவ்வேறு அர்த்தப்பாடுகள உருவாக்கிக் கொண்டே இருக்கும்.

- **மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு நண்பர்களால் ஆண்களின் செயல்வாதம் முன்னெடுக் கப்பட்ட போது அதில தொடர்ந்து செயற்பட் டிருக்கிங்க அது பற்றிச் சொல்லுங்க.**

பெண்கள் மீதான ஆண்களின் செயல்வாதம் என்பது வாழ்கையாக இருக்கணும். நான் வாழ்கையில முயற்சி செய்து பார்த்தன். ஏலுமான இடத்தில பெண்கள முதல் இடத்தில வைக்கக்குள்ள என்ன என்ன பிரச்சின வரும் எண்டு பார்த்தன். பாடசாலை பதிவில முதல் ஆம்பிளப் பிள்ளைகளிட பேரையும் பிறகு பொம்பிளப் பிள்ளைகளிட பேரையும் எழுதுறது தான்வழக்கம். நான் முதலில பொம்பிள்ளப் பிள்ளைகளிடப் பேரை எழுதினன். நீங்க ஏன் எழுதினிங்க எண்டு ஒத்தரும் கேக்கல. தங்களுக்குள ளேயே கதைச்சுக் கொண்டாங்க. பிழை எண்டும் ஒத்தரும் சொல்லல்ல அப்படியும் எழுதலாம் எண்ட எண்ணத்த மற்றாக்களுக்குள்ள ஏற்படுத்தி இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைக்குள்ள எந்தவித முயற்சியும் செய்யாம கலைப் படைப்புக்குள்ள மட்டும் கதைக்கிறதால எந்த அர்த்தமும் இல்ல. பெண்ணிலை வாதம் என்பது வார்த்தல்ல அது வாழ்க்கை. நான் கீறுற படத்தில அதத்தான் கீறினன். கூத்து முகமூடிகளையோ கூத்து உடுப்புக்களையோ அலங்காரப் பொருட்களா விற்கிறதால கூத்து வளராது. கூத்த ஆடிக்கொண்டு இருக்கோணும். கூத்தாடுற இடத்தில இப்படியான சாமன்கள விக்கலாம். படம் கீறுறதுக்கு மட்டும் நாடகம் போடுறதுக்குமட்டும் பெண்ணிலைவாதம் பாவிக்கிறவங்களால எதுவும் ஆகப்போறதில்ல. அது வாழுறதிற்கானது. வாழக்குள்ள வாறப்பிரச்சினைகள நாம கேள்வி கேக்கக்குள்ள அத படமாக்கீறிப்போட்டுப் பார்க்கலாம். வாழ்நாள் பிரச்சன. அது லேசான பிரச்சன இல்ல. நான் இப்படி இரண்டு வருசத்திற்கொருக்கா கண்காட்சி வைக்கிறதால அது சாத்தியமாகுமா? நான் தோத்துப்போவனா? இல்ல எனக்குப் பின்னால ஒரு கூட்டம் வரலாம். சாத்தியமா சாத்தியம் இல்லையா என்று தெரியாமத்தானே நிறையப் பேர் வேல செய்றாங்க. அன்னை திரேசாவப் பாருங்க ஒவ்வொரு ஏழைகளையும் தூக்கி அவ மேல எச்சில் துப்பினப்போதும் அந்த மனுசி துடச்சிப்பொட்டு வேலையத் தொடர்ந்து செஞ்சிட்டே இருந்தா.

- **பெண்களது பிரச்சினைகள ஒரு ஆண் ஓவியரா உங்களால வெளிப்படுத்த முடியுதா?**

பொம்பிள தொடர்பா ஆண்களால எப்படிக் கீற முடியும் பெண்களாலதான் கீற முடியும். நான் கீறுற படங்களுக்கு ஒரு எல்ல இருக்கு அதுக்கங்கால என்னால போக முடியாம இருக்கலாம். நீங்க சொல்லுற மாதிரி முகத்தில அடிக்கிற மாதிரி கவித எழுதுறது போல என்னால கீற ஏலாம இருக்கலாம்.நானும் பெண்ணாக இருந்திருந்தா வேற மாதிரிப்படங்கள் வந்திருக்கும். சில வேள அது கேக்கிற கேள்விக்குபதில் சொல்ல முடியாத மாதிரி இருந்திருக்கும். ஆணா இருக்கிறதால அந்த மாதிரி கேள்விகள கேட்கிற படங்களகீறத்தெரியாம இருந்திருக்கும். அனுபவிக்குள்ள தான் அந்தப்பிரச்சனைகள் விளங்கும். நானும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி செய்யிறன் அத விளங்கிக் கொண்டு கதைக்கிறன். அதனாலதான் சில படங்கள் எனக்குள்ளால வருகுது. அது ஆண்படங்களிலிருந்து வேறுபடுது.

அது மூன்றாவது கண் நண்பர்களோட சேர்ந்து திரிஞ்சதால எனக்குள்ள போயிருக்கலாம். ஆனா அது எல்லோருக் குள்ளும் போகாது. அதுக்கு இடம் கொடுக்கணும். முதலில அது எனக்குள்ள இருந்திருக் கணும். எங்கட வீட்டில அது சொல்லப்படாமலே இயல்பா நடந்திருக்கு. வீட்டில வேல பகிர்ந்து நடந்திருக்கு. அத உள்வாங்கிறதுக்கும் நடமுறைப்படுத்துறதுக்கும் எனக்கு கஸ்ரமா இருக்கல. மூன்றாவது கண் நண்பர்களோட சேர்ந்து வேல செய்யக்குள்ள அது தெளிவா விளங்கினது.

- **உங்களது படங்கள் ஏதில வேறுபடுகிறதா நினைக்கிங்க.**

மிகப்பழைய காலத்திலிருந்தே ஆண்களிட கையில உள்ள கலைகளாகத்தான் எல்லாக் கலைகளும் இருந்திருக்கும். அப்ப அவங்க பெண்கள எப்படிப் பார்த்தாங்களோ அப்படித்தான் பாவிச்சு வந்திருக்காங்க. நான் இந்தக் காலத்தில இருக்கிற ஆள். இண்டைய சூழலில இருந்த விளக்கங்களும் ஊட்டப்பட்டதால எண்ட படங்களில் மாற்றங்கள் வந்திருக்கலாம். பெண்களிட உடலநான் வெளிபடுத்துற முற வேறுபட்டு இருக்கு அது வழக்கமா ஆண் ஓவியர்கள் பெண் உடல வெளிப்படுத்துறதில இருந்து வேறுபட்டிருக்கு. வளைவுகளும் லயங்களும் முக்கியம் எண்டும் இதத்தான் ஓவியம் இலக்கியம் எண்டு சொல்லி பெண் உடல் வனப்பகாட்டுற படங்களா கீறிறாங்க. பேப்பரில நடுப்பக்கத்தில சினிமாப்படத்த போடுறாங்க புத்தகத்துக்குஅட்டைப்படத்தில போடுறாங்க அந்த தேவைகளுக்காகத்தான் பெண்கள் பயன்படுத்தப்பட்டு வாராங்க. நானும் பொம்பிளைகளிட முகத்தான் கீறிறன். ஆன நான் கீறுறது வேற மாதிரி இருக்கு. வழக்கமா கீறுறதில இருந்து மாறுபட்டிருக்கு. யாரும் கருத்தில கொள்ளப்படாத பெண்கள்எண்ட படத்திலகருத்தில கொள்ளப் பட்டிருக்கு. படத்தில வரணும் எண்டா ஐஸ்வரியாராய் மாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கணும். ஆனா நான் எண்ட ஊரில இருக்கிற அம்மாட முகத்தப் படத்தில கீறினன். வழமையான ஓவியங்களில இலக்கியங்களில வெளிப்டுற அழகு வேறயா இருக்கு நான் நினைக்கிறது வேறயா இருக்கு. இப்படி யோசிக்கிறது நான் மட்டும் என்டு டக்கெண்டு சொல்றது எவ்வளவு பொருத்தம் எண்டு தெரியல்ல தேடிப்பாக்கனும்.

- **One Billion பெண்கள் எழுச்சி பெண்மீதான வன்முறை களுக்கெதிரான பிரச்சாரம் தானே. அத்தோடு தொடர்புபடுத்தி இந்த படங்கள் கீறக்குள்ள உங்கடமனதில் ஒரு படம் இருக்கும் தானே, எப்படி முகங்கள் தொங்கிறது பெண்களோட பெண்களிட முகங்களும் சேர்ந்து அவங்கட செய்திகளும் வந்திருக்குதெல்லோ இது பற்றிச் சொல்லுங்க.**

சமகாலத்தில் ஓவியங்களின் முறை எல்லாம் மாறிப் போய்யிருக்கிற சூழலில் 100 கோடி பெண்கள் எழுச்சிக்கு ஏதோ கம்லாவாசின் கதைக்கிறாவு என்ன செய்போறீங்க என்டுஆக்ரோசமா கைகாட்டுறா கேக்கிறா என்னவாவது நம்மளும் செய்யணும். நானும் பெண்கள் ரீதியா படம் கீறுறன். என்று பாக்கிறாக்கள் சொல்லுறாங்க. இதற்கு என்ன செய்யப் போறன். அணில் போய் மண் போட்ட கததான். என்ன நடக்குமோ தெரியாது அனா செய்து பாப்பம் நடந்தா அதுக்குள்ளால நடக்கட்டும். என்னவோ செய்வோம்.ஆனா என்ன செய்யப்போகிறோம் என்ட ஐடியாவே இல்ல. ஒரு painting Exhibition நடந்தாலும் நடக்கலாம். பெண்கள் தினம் நடக்கக்குள்ளேயும் இன்டைக்கு நான் ஒரு பொம்பிள பற்றி Exhibition வைச்சிருக்கலாமே எண்டுநினைப்பன் அந்தந்த தினங்கள் வரக்குள்ள தான் அது உச்சமாக இருக்கும் பிறகு விடுபட்டிடும்.ஆனா இதில ஏதாவது செய்யணும் என்ட எண்ணம் இருந்தித்தே இருந்தது. அப்பத்தான் என்ன எங்கேயாவது நடந்தா அந்த இடத்தில கொண்டுபோய் கொடிகளில தொங்கப்போடுற படங்களா அது உருவாச்சி.

துணிகளில வித்தியாசமான வயசுஒத்த முகங்கள கீறித் தொங்கப்போடலாம் எண்ட ஒண்டு இருந்திட்டே இருந்திச்சு. இதுக்கு என்னிட்ட எந்த ஐடியாவுமில்ல. அப்பத்தான் நிறைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சயமான முகங்களக் கீறினன். இதற்கு நான் அதிக நேரத்த செலவளிக்கல. ஒரு படத்திற்கு 15 நிமிசந்தான் எந்தவிதக் கட்டுப்பாடுமில்லாம எந்தவொரு வரைய றைகளோ பயமோ பதட்டமோ இல்லாமல் அந்த படங்களைக் கீறினன் அது எங்கட ஊர் அம்மாக்களிட முகங்களா யாருடைய முகங்களாக்கூட இருக்கலாம். அந்த முகங்கள் கீறிவைச்சதுக்கும் பிறகுதான் அந்த நிகழ்ச்சி எப்படி ஒழுங்குபடுத்தப் படப் போகுது எண்டு கடசி நேரத்திலதான் தெரிஞ்சது. ஒரு இடத்தில வந்து கூடப்போகிறம் ஊர்வலமா வரப்போறம். கொடிகளாகவே ஊர்வலமாவரப் போறமாதிரி மாத்தி அமைச்சம்.

ஒரு ஆற்றுகை ஓவிய முறையா அது மாறினது. எல்லாரும்அத கொடியில புடிச்சிக் கொண்டு பெண்களே தூக்கிப் போகிறது, எங்கட பிரச்சினைகளை எங்கட கதைகளையும்நாங்க எங்கட முகங்களுடாக ஊருக்குள்ள கொண்டு செய்திகளாப் போறம். பங்குகொண்ட 600 ற்கு மேற்பட்டவங்கள் வீதியால போன ஆக்கள் எல்லாருக்கும் பகிரங்கமா தூக்கித்து ஒரு அறிக்கை இட்டு போன தென்பதுஅதுபாக்கிற ஆக்களிட்ட கேக்கணும் என்ன நடந்தது எப்படியிருந்நதது எண்டு. நான் நினைச்சது அங்க நிறைவேறினது. அப்படிக்கொண்டு போன படங்கள அங்கு சேர்ந்திருந்த ஆண்களும் பெண்களும் கையொப்பமிட்டது என்றது. மிகப்பெரிய வெற்றியாகவும் நான் நினைச்ச நோக்கத்திற்கு சப்போட் பண்றதாகவும் இருந்தது. எல்லோரும் நாங்களும் அங்கிகாரமாக உறுதுணையாக நிக்கிறம் முன்னெடுப்புக்கு நாங்களும் பங்குதாரராக இருக்கம். எல்லாம் சொல்லுறதா இருந்தது.

 **உங்கட படங்களில அங்கு ஊர்வலத்தில வந்திருந்த வங்க கையொப்பமிட்டாங்க. உங்கட படத்தில இன்னொருவர் கையொப்பமிட்டது எப்படியான அனுபவமா உங்களுக்கு இருந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமொரு ஆள தன்ர ஓவியத்தில கைவைக்க விடாத கைவைக்காத சூழலில அங்கிருந்த எல்லாப் பெண்களும் ஆண்களும் கையொப்பமிட்டார்கள். அது மிக வேறமாதிரி கையெப்பங்களாகவும் இருந்தது. அது வேறொரு அனுபவம். தன்ர ஓவியத்தில எல்லோரையும் கைவைக்க விடுறது எல்லோராலும் ஏலவும் மாட்டாது. நான் நினைக்கிற இடத்தில் அவங்க கைவைக்கமாட்டாங்க அவங்க நினைக்கிற இடத்திலதான் அவங்க கைவைப்பாங்க. நான் நினைக்கிறன் இது குடும்பங்களுக்குள்ளேயும் வேண்டும் என. ஒருவரிட படத்தில இன்னொருவர் கைவைக்கிறது கலைப்படைப்பில குறிப்பா ஓவியத்தில ஏலாத விசயம். எல்லா உரிமமும் அவருக்குத்தான். ஒரு புள்ளிக்கும் கத வைச்சிருப்பார். பதில் வைச்சிருப்பார்.

**இதே படங்கள் உங்களது வெள்ளை ஓவியக் கண்காட்சியில் வேறொரு வெளிப்படுத்தலைத் தந்திருந்தது.**

இந்தக் கண்காட்சியில நான் பெண்கள எப்படி வெளிப்படுத்தப் போறன். இது பெண்களிட முகங்கள காயப்போடுறதா இக்ருக்குது. இதுக்குள்ள யுத்தத்திற்கும் பின்னான பேச்சாக இருக்குது. யுத்தத்திற்குப் பின்னான சூழலில பெண்களின் உரையாடல் வேறமாதிரியாகவும் மிகுந்த கவனத்திற்குரியதாகவும் இருக்குது. அது வெளியில தெரியவுமில்ல. சமாதானம் அபிவிருத்தி எல்லாம் கதைக்கிறம் எல்லாப் பெண்களும் வித்தியாசம் வித்தியாசமான பிரச்சனைகளோட உடல் அங்கவீனத்தில இருந்து உளப் பிரச்சனையில இருந்து அடுத்தகட்ட வாழ்க்கை தொடர்பான பிரச்சனையிலிருந்து ஏராளமான பிரச்சனைகள். இது தொடர்பான சிந்திக்கத் தெரிஞ்ச எல்லோருக்கும் விளங்கும். என்னென்ன பிரச்சன இருக்குதெண்டு சொல்லி, இப்படியான இருப்புகளுக்குள்ள வாழுற பெண்களுக்கு நாங்க என்ன சொல்ல வாறம் பெண்களிட பிரச்சனய வெளிச்சம் போட்டுக்காட்டுறமா அல்லது அவங்களுக்கு ஆறதலா இருக்கமா? சில கேள்விகள கேக்குறதுக்கூடாக நாங்க எல்லாப் பெண்களுக்கும் இதச் சமர்ப்பணம் செய்யிறம் எண்டதா இருந்திச்சு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை கொண்ட ஆண்கள் பால்நிலை சமத்துவத்தை உள்வாங்கி வாழ்பவர்கள்.

**சி.ஜெயசங்கர்**

பால்நிலை சமத்துவத்திற்கான முன்னெடுப்புகளில் ஆண்களின் பங்கேற்பு என்பது பெண்களை வலுப்படுத்தும் ஆண்களின் பங்கேற்றல் என்ற மேற்படையான அர்த்தப்பாடு மட்டுமல்ல. அது காலாதிகால ஆண், ஆண்மை பற்றிய புனைவுகளில் இருந்து ஆண்களை விடுவிக்கும் அடிப்படையான நோக்கையும் கொண்டதாகும்.

ஏனெனில் ஆண், ஆண்மை பற்றிய புனைவுகள் வெளிப்படையாகவே பெண்களையும் உள்ளார்த்தமாக ஆண்களையும் பலவீனப்படுத்துவதாகவே காணப படுகின்றது. ஆண், ஆண்மை என்ற நடைமுறைப் புனைவுகள் வெறும் தோற்றப்பாடுகளே அன்றி உண்மையானவை அல்ல என்பதை விளங்கிக்கொள்ள முடிகிறது. அதனால்தான் ஒவ்வொரு ஆணினதும் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்பது வலுவான புளக்கத்தில் இருந்து வருகின்றது.

ஆண்மை என்பது தங்கி வாழாது இணைந்து பகிர்ந்து வாழ்தல் என்பதான அர்த்தம் கொண்டதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறை இல்லை. ஆதிக்கம், கட்டுப்படுத்தல், சுரண்டுதல் என்ற இயல்புகளை அது கொண்டிருப்பதையே காணமுடிகிறது.

சாதி, இனம், மொழி, வர்க்கம், சமயம் போன்றவை சமூகநிலைப்பட்டு ஆதிக்கமுடையதாக இயங்கிவரும் பின்னணியில் பால்நிலை ஆதிக்கம் குடும்பக் கட்டமைப்பினுள் மிக வலுவான இயக்கம் கொண்டதாக இருக்கிறது. இது அன்பு, பாசம், ஒழுங்கு, மதிப்பு அல்லது மரியாதை என்ற எளிதில் இனங்காண முடியாத வடிவங்களில் எல்லாம் ஆட்கொள்வதாக இருக்கின்றது.

சமூகநிலைப்பட்ட ஆதிக்கங்கள் மிகப் பெரும்பாலும் ஆண்களால் ஆண்களுக்கெதிரான முன்னெடுப்புக்களாகவே வரலாறுகளில் இருந்து நடைமுறைகள் வரை காணப்படுகின்றன. ஆண்மையப்பட்ட இந்த முன் னெடுப்புக்கள் அடிப்படையில் வன்முறை அல்லது பலப்பிரயோகத்தை வழிமுறையாகக் கொண்டிருக்கும்.

இங்கு மாற்றம் என்பது வெற்றிகொள்ளுதல் அல்லது தோற்கடித்தல் அல்லது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல் அல்லது அழித்தொழித்தல் என்பதையே நோக்கமாகவும், முடிவாகவும் கொண்டிருக்கும்.

பால்நிலை சமத்துவத்திற்கான முன்னெடுப்பு என்பது வித்தியாசமானது. இது எந்த வகையிலும் வன்முறைக்கு இடமற்ற நோக்குடையது. பலவீனங்களை இனங்கண்டு களைவதினூடாக ஆளுமை மாற்றம் கொள்வது இதன் அடிப்படையாகும்.

இதனாலேயே ஆண்மை, பெண்மை என்ற புனைவுகளின் மூலமாக ஆண்களதும், பெண்களதும் ஆளுமைச் சிதைப்புகளில் இருந்து இருபாலாரும் தங்களை விடுவித்துக்கொள்ளும் முன்னெடுப்பாக பால்நிலை சமத்துவத்திற்கான முன்னெடுப்பு அமைகின்றது. இதில் ஆண்களின் பங்கேற்பு என்பது ஆதரவுக்கானது மட்டும் அல்ல அது அவஉகளுக்குமானது ஆகும். இது ஆண், ஆண்மை என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயக்கம்பீரப் புனைவுகளுள் புதையுண்டு கிடப்பதில் இருந்து எழுந்து கொள்வதாகும்.

நடைமுறையில் காணப்படுவது போல கண்ணுக்குப் புலனாகும் வகையிலும், கண்ணுக்குப் புலனாகா வகையிலும் தங்கி வாழ்வதற்கு மாற்றாக சேர்ந்து வாழ்வதாகும். இந்தவகையிலேயே பெண்ணிலைவாதச் சிந்தனை என்னுள் செல்வாக்குச் செலுத்த தொடங்கியது. ஏனெனில் இது பெண்களுக்குரியதாகவும் அவர்களால் முன்னெடுக்கப் படுவதாகவும் மனித குலத்திற்கு மட்டுமன்றி எல்லா உயிர்களுக்கும் புவியின் சுற்றுச் சூழலுக்கும் ஏற்புடையதாகவும் இருக்கிறது.

ஆதிக்கத்திற்கு மாற்றான மற்றொரு ஆதிக்கமாக அல்லாது வித்தியாசங்களைக் கொண்டாடுகின்ற இணைந்து வாழ்தலுக்கான மாற்றங்களைக் கோருவதாக இருக்கின்றது. உலகப் பெண்கள் எல்லோரதும் ஒன்றுபடுதல் என்பது அவர்கள் மத்தியில் காணப்படுகின்ற வித்தியாசங்கள் எல்லாவற்றையும் கருத்தில் கொண்டதாகவும் கணக்கில் எடுத்துக் கொண்டதாகவும் காணப்படுகிறது.

இது முக்கியமானது. ஏனெனில் ஒடுக்கப்படுபவர்கள் என்ற வகையில் உலகம் பூராவும் உள்ள பெண்களது நிலை ஒரே மாதிரியானது அல்ல. பல தராதரங்களையும், படிநிலைகளையும் கொண்டது என்பதும் அடிப்படையான விடயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

வித்தியாசங்களின் குரல்களே இங்கு பலத்தின் அடிப்படையாகக் கொண்டாடப்படுகின்றது. அதிகாரத்துவம் மிக்க தீர்மானிக்கும் சக்தி ஏற்றுக்கொள்ளப்படாதது என்பதும் இதன் முக்கிய அம்சமாகும்.

இந்தப் பண்புகளும் பாவனைகளும் பெண்ணிலை வாதம் உலகிற்கு வழங்கிக்கொண்டிருப்பது. பால்நிலை சமத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்திற்கான எனது வாழ்வு என்பதும் இந்த அடிப்படைப் பண்புகளை உள்வாங்கிக் கொண்டிருப்பதன் வெளிப்பாடு ஆகும்.

இந்த வாழ்க்கை முறையினை நடைமுறையில் கொண்டு இயங்குவது சவால்கள் நிறைந்தது. ஆண், ஆண்மை பற்றிய நூற்றாண்டு கால பதிவுகளும், பாதிப்புகளும் உள்ளும் புறமாகச் செல்வாக்குச் செலுத்தும் சூழ்நிலையில், புத்திபூர்வமான அறிதலும், உணர்வுள பூர்வமான உள்வாங்குதலும் ஒருமித்துப் பயணிப் பதில்லை. இவற்றின் இடைவெளி மிகவும் அதிகமானது. புத்திபூர்வமான அறிதல் ஏமாற்றும் தன்மை கொண்ட தாகவும் அமையும் சாத்தியப்பாடுகள் அதிகமானவை.

இத்தகைய சூழ்நிலையில் பால்நிலை சமத்துவத்திற்கான ஆண்களின் முன்னெடுப்புகளில் எனது ஈடுபாடு என்பது குடும்பத்திலிருந்து நண்பஉகள் வரையிலான பல பெண் ஆளுமைகளது உறவும் தொடர்பும் பெண்ணிலைவாதம் சார்ந்த தொடர்ச்சியான முன்னெடுப்பு களதும் விளைவு என்பது எனது அனுபவம்.

பெண்ணிலைவாதம் பற்றிய அறிதலும், புரிதலும் வாழ்தலினூடான உணர்தலும் புரிதலுமான பயணம். வன்முறைகளற்ற, ஆதிக்கங்கள் நீங்கிய சகோதரத்து வத்தால் கட்டியெழுப்பப்படும் உலகினை உருவாக்கும் நோக்கில் வழிநடத்துகிறது.

பெண்ணிலைவாதம் வன்முறைகளற்ற உலகங்களை உருவாக்கும் உந்துசக்தி. சமத்துவத்திற்கான ஆண்களின் முன்னெடுப்பு என்பது பெண்ணிலைவாதச் சிந்தனையின் விளைவும் முளைப்பும் ஆகும். இதில் எனது வாழ்க்கை பால்நிலை சமத்துவ உணர்திறன் கொண்ட மனித சமூகங்களின் வளர்ச்சியும் விரிவாக்கத்துடனும் சங்கமித்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இச்செயற்பாடு பற்றி ....

**செ. ஜோண்சன்**

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான ஆண்களின் செயல்வாதம் எனும் செயற்பாடு 2004 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் கருவேப்பங்கேணியில் ஆரம்பமாகி தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வந்தது.

இந்தச் செயற்பாடானது இரண்டு நோக்கங்களை கொண்டதாக அமைகிறது. அதாவது பெண்கள் ஆண்களின் ஆதிக்கத்திலிருந்து மீளுதல், அடுத்ததாக பெண்கள் சமூக கட்டுப்பாடு, ஒடுக்குமுறைகளில் இருந்து மீளுதல். இதில் முக்கிய பிரச்சினையாக எமக்குத் தென்படுவது என்னவென்றால் பெண்கள் இன்னும் சமூக கட்டுப்பாடு ஒடுக்குமுறைகளில் இருந்து மீளவில்லை என்பதே. ஏனென்றால் பெண்களை சமூகமானது பிறந்தது முதல் முதிர்ச்சிப் பருவம் அடையும் வரைக்கும் பெண் என்பவள் இப்படித்தான் வாழ வேண்டும் எல்லை தாண்டி செல்லக் கூடாது என்று கட்டுப்பாடுகளை விதிப்பதால் பெண்கள் மென்மையானவர்களாக சமூகத்திற்கு காட்டப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக ஆண்களையோ அப்படி வளர்ப்பதில்லை அவர்களை சமூகத்தில் உயர்ந்தவர்கள் என்றும், பலம் கூடியவர்கள் என்றும் வர்ணித்து அவர்களை உண்மையிலேயே வல்லமை வாய்ந்தவர்களாக மாற்றிவிடுவார்கள். ஆனால் பெண்களையோ அவள் பெண்பிள்ளை அவள் மற்றவர்களுக் கெல்லாம் அடங்கி நடப்பாள் என்றும், அதிலும் முக்கியமாக எதிர்கால கணவனுக்காக தற்போது தயராகிக் கொண்டிருக்கும் ஒரு இயந்திரமாக கணித்து விடுவார்கள் இதனால் தான் பெண்கள் தற்போதும் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றனர். எனவே இதை தனிய பெண்களின் பிரச்சினை என்று கூறமுடியாது. மாறாக சமூகத்தில், உள்ள ஆண், பெண் இருபாலாரினுடைய பிரச்சினை ஆகும். எனவே சமூகத்தில் இப்படியொரு ஏற்றத்தாழ்வு பிரச்சினை உள்ளதால் தான் சமூகத்தில் உள்ள மிகப்பெரும்பாலான ஆண்கள் பெண்களை தங்களுடைய சொத்தாக பாவிக்கின்றனர்.

எனவே யாராவது ஒரு பெண் அவலநிலைக்கு தள்ளப்பட்டாள் என்று நாம் கேள்விப்பட்டால் அதற்கு முதற்காரணம் சமூகம். இரண்டாது காரணம் பெரும்பாலான ஆண்கள் எனவே இதிலிருந்து பெண்களை மீளவைக்க வேண்டும். அதனோடு சமூகத்தில் அவர்களை ஒரு பலமுள்ளவர்களாகவும், அதேவேளை ஆணுக்கு பெண் சரி சமம் என்ற கோட்பாடும் இந்த உலகில் நிற்கவேண்டும் என்பதற்காகவே இந்தப் பயிற்சிப் பட்டறையை திருமதி. கமலா வாசுகி என்பவரால் மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழுவினருக்கும், கருவேப்பங்கணி கலைக்கழகத்திற்கும் சேர்த்து ஒவ்வொரு கிழமைகளிலும் சனி, ஞாயிறு தினங்களில் சரியாக 3.30 மணியளவில் ஒன்றுகூடி கலந்துரையாடல்களும், பெண்களின் தற்போதைய நிலை பற்றிய செயற்பாடுகளையும் நடித்தலுமாக இப்பயிற்சி பட்டறை நடந்து கொண்டு வந்தது.

இந்தக் கலந்துரையாடலானது பெண்களுக்கு சமூகத்தில் உள்ள இடம், பெண்கள் அவலநிலைக்கு உள்ளாக்கப்படும் விதம் போன்றவற்றை கலந்துரையாடி அதற்கு எவ்வாறானதொரு தீர்வைப் பெறலாம் என யோசித்து அதை நடைமுறைப் படுததினால் அது சாத்தியமாகுமா என்பதை பற்றி சிந்தித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு எவ்வாறு ஒரு நடகமாகவா, கட்டுரையாடகவா, சித்திரமாகவா, ஓவியமாகாவா, கவிதையாகவா செயற்படுத்துதல் என்பது பற்றி எமக்கு கமலாவாசுகி என்பவரால் விளக்கப்பட்டது. அதற்கு தக்க தீர்வாக ஒரு நாடகமாக நடித்துக் காட்டுவதுதான் மிகப்பொருத்தமானதாக அமையும் என எல்லோரும் கூடி முடிவெடுத்தோம். நாடகமும் பழகிவந்தோம் இது வெற்றிக்கரமாக ஒரு பக்கம் ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26ம் திகதி இயற்கை அழிவு காரணமாக இந்தப் பயிற்சிப்பட்டறை இடை நடுவில் நிறுத்தப்பட்டது. ஆனால் இதில் நாம் சற்று சிந்திக்க வேண்டும். இந்த இயற்கை அழிவான ஆழிப்பேரலயால் இறந்தவர்களுள் கூடுதலானவர்கள் பெண்கள். எனவே நாம் இதில் சற்று ஆழமாக சிந்திக்க வேண்டும் .

இதற்கு காரணம் என்ன? எனவே இதற்குப் பதிலாக நாம் முன்வைக்கப்போவது சமூகத்தில் பெண்கள் இருந்த நிலைதான் காரணம் ஆகும். ஏனெனில் பெண்களின் தலைமுடி நீளமாக இருத்தல் வேண்டும். முழங்காலுக்கு மேலே சட்டை போட முடியாது. இப்படியான சில பிரச்சினைகளால் தான் பெண்களை நாம் இழக்க வேண்டியதாக இருந்தது. எனவே தற்போதைய காலத்திலும் கூட பெண்களை இப்படியானதொரு சில மூடக் கட்டுப்பாடுகளை விதிக்காமல் அவர்களையும் ஆண்களைப் போல் வளர்த்தெடுக்கவேண்டியது சமூகத்தில் உள்ள எல்லோருடைய கடமையுமாகும். ஏனெனில் சமூகத்தில் ஏற்படும் சாதிப்பிரச்சினை, இனப்பிரச்சினை, மதப்பிரச்சினை போன்றவற்றுள் கூடுதலாக பாதிக்கப்படுபவர்கள் பெண்கள் தான். ஆனால் நாம் ஒன்றை அவதானிக்க வேண்டும். பெண்களுடைய வன்முறைகளுக்கு எதிராக பெண்கள் செயற்படுத்தும் செயல்வாதமானது ஆண்களை பாதிக்காத வண்ணமாக உள்ளது. எனவே ஆண்களும், பெண்களை எந்த விதத்திலும் அவர்களை உளரீதியாகவோ, உடல்ரீதியாகவோ பாதிப்புக்கு உள்ளாக்காதீர்கள். ஏனெனில் அப்போதுதான் உலகத்தில் உயிரினங்கள் மிஞ்சும் எனவே எல்லோரும் ஒற்றுமையாக இருத்தல் வேண்டும்.

**பங்குனி . 08 . 2005**

**பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான ஆண்களின் குரல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டு நண்பர்கள் வட்டத்தின் பால்நிலைச் சமத்துவம் நோக்கிய செயல்வாதப் பயணம்.

கடந்த 2004 ஆம் ஆண்டு திருமதி கமலா வாசுகி அவர்களின் பயிற்சிப் பட்டறையின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாதமானது தற்போது தனது 10 ஆவது ஆண்டை அடைவதையிட்டு தான் கடந்து வந்த சுவடுகளை இங்கே பதிக்க முற்படுகின்றது.

### 2004 ஒக்டோபர்

மூன்றாவது கண் நண்பர்கள், சீலாமுனை கலைக்கழக நண்பர்கள் மற்றும் கருவேப்பங்கேணி கலை நண்பர்களை இணைத்துக்கெண்டு வாசுகி அவர்களால் வன்முறைகள் தொடர்பான கலந்துரையாடல் சீலாமுனையில் ஆரம்பிக்கப்பட்டது.

### 2004 நவம்பர் - திசம்பர்

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கலந்துரையாடலானது பயிற்சிப்பட்டறையாக மாறி அதன் மூலம் பங்குபற்றுனர்களால் உருவாக்கப்பட்ட ஆக்கங்களை வைத்துக்கொண்டு திரு.சி. ஜெயசங்கர் அவர்களால் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக் கெதிரான ஆண்களின் செயல்வாத வீதிநாடகம் உருவாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2005 மார்ச்

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாத வீதிநாடக ஆற்றுகையானது மார்ச் 8 பெண்கள் தினத்தை முன்னிட்டு சீலாமுனைக் கிராமத்தில் முதல் முறையாக பிரத்தியோக அழைப்பாளர்கள் முன்னிலையில் ஆற்றுகை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இச் செயல்வாதம் சம்பந்தமான கலந்துரையாடலும் ஆரம்பிக்கப்பட்டது.



## 2005 யூன் - யூலை

முதல் முறையாக பொதுமக்களுக்கான ஆற்றுகை மேற்கொள்ளும் பொருட்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பின் நாவலடி கிராமத்தவர்கள் தங்கியிருந்த நெல் சந்தைப்படுத்தும் சபை சுனாமி நலன்புரி முகாமில் கெயார் நிறுவனத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் ஆற்றுகை நிகழ்த்தப்பட்டதோடு பங்குபற்றலுடனான கலந்துரையாடதும் முன்னெடுக்கப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2005 ஓகஸ்ட் - செப்டம்பர் - ஒக்டோபர்**

தொடர்ச்சியாக கெயார் சர்வதேச நிறுவனத்தின் அனுசரணையோடு முறையே மட்டக்களப்பின் மண்டூர், பாலையடிவட்டை, பட்டிப்பளை, வெல்லாவெளி, போரதீவு, காக்காச்சிவட்டை, கழுவன்கேணி, வந்தாறுமூலை ஆகிய கிராமங்களில் இச் செயல்வாத வீதிநாடக ஆற்றுகை மேற்கொள்ளப்பட்டதோடு கிராமத்தவர்களை உள்வாங்கிய விழிப்புணர்வுக் கலந்துரை யாடலும் இடம்பெற்றது.





**2006 மார்ச்**

மேலும் மற்றுமிரு சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களான பாலையடித்தோனா மற்றும் கிரான் ஆகிய இடங்களில் கெயார் நிறுவன அனுசரனையோடு இச்செயல்வாத நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது.

அடுத்து மூன்றாவது கண் குழுவானது சுயமாக மேலும் இரு சுனாமி நாலன்புரி நிலையங்களான மட்டக்களப்பு கள்ளியங்காடு மற்றும் திராய்மடு கிராமங்களில் இச்செயல்வாத ஆற்றுகைகள் நிகழ்த்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2006 ஏப்பிரல்**

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் எங்களால் முடியும் பிரச்சாரத்தின் வேண்டு கோளுக்கிணங்க அப்பிரச்சாரத்தின் மாற்றத்தை உருவாக்குபவர் களுக்காக மட்டக்களப்பு மன்றேசா நிலையத்தில் நடைபெற்ற தேசிய ஒன்று கூடலில் இச் செயல்வாத ஆற்றுகை நிகழ்த்தப்பட்டது.

**2006 மே - யூன்**

கெயார் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்க பால்நிலை அதிகார உறவுகள் திட்டத்திற்கான பிரச்சாரக் குழுவைத் தாபிக்கும் பொருட்டு இச்செயல்வாதமானது அதற்கான தொழிநுட்ப ஆலோசனைகளை வழங்கியதோடு, பிரச்சாரக் குழுவிற்கான பயிற்சியையும் வழங்கி பங்குபற்றல் பிரச்சார வீதி நாடகத்தையயும் உருவாக்கியது.



**2006 ஒகஸ்ட்**

கெயார் நிறுவனத்தின் பால்நிலை அதிகார உறவுகள் திட்டத்தின் பிரச்சாரக் குழு ஏற்பாட்டில் புதுக்குடியிருப்புக் கிராமத்தில் அக் குழுவால் அளிக்கை செய்யப்பட்ட வீதிநாடக ஆற்றுகையோடு எமது இச்செயல்வாதத்தின் சில பாடல்களும் ஆற்றுகை செய்யப்பட்டன. மேலும் பார்வையாளர்களிடையேயான கலந்துரையாடலை இச்செயல்வாதம் முன்னெடுத்திருந்தது.

**2007 மார்ச்**

கெயார் நிறுவனத்தால் மட்டக்களப்பின் மயிலங்கரச்சை மற்றும் தியாவட்டவான கிராமங்களில் முன்னெடுக்கப்பட்ட பால்நிலை அதிகார உறவுகளைப் புரிந்துகொள்வதனூடு பால்நிலைச் சமத்துவத்தை நோக்கிய மாற்றத்தை ஏற்படுத்தல் எனும் பிரச்சாரத்தில் எமது இந்தச் செயல்வாத அளிக்கையானது ஐந்து பகுதிகளில் ஆற்றுகை செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 மே - யூன் - யூலை**

மன்னார் பெண்கள் அபிவிருத்தி மன்ற ஏற்பாட்டில் பெண்கள் குழுக்களுக்கான பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறை களுக்கு எதிரான பிரச்சாரங்களை உருவாக்கும் பொருட்டு இச் செயல்வாதத்தின் அங்கத்தவரான ஓவியர் நிர்மலவாசன் அவர்கள் அங்குள்ள பெண்கள் மற்றும் இளைஞர் குழுக்களுடன் இணைந்து ஓவியச் செயல்வாதத்தை முன்னெடுத்து எமது செயல்வாதத்தின் இன்னுமொரு பரிமாணத்தை ஆரம்பித்து வைத்தார்.



**2011 ஒக்டோபர்**

WESDO – கந்தளாய் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களது செயற்பாட்டுக் குழுவினருக்கு இச்செயல்வாத அங்கத்தவர்களால் பால்நிலைச் சமத்துவம் தொடர்பான பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது. இப்பயிற்ச்சிப்பட்டறையானது ஆண் பங்குபற்றுனர்களுக்கு வேறாகவும் பெண் பங்குபற்றுனர்களுக்கு வேறாகவும் நடைபெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 ஒக்டோபர்**
மூன்றாவது கண் குழுவின் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாத வீதி நாடகமானது அடிப்படையில் புதிய அங்கத்தவர்களையும் இணைத்துக்கொண்டு பின்னூட்டல்களையும் உள்வாங்கி மீளப்புதுப்பிக்கப்பட்டது.

**2011 நவம்பர் - டிசம்பர்**
பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான 16 நாள் செயல்வாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பிரதேச செயலகத்தில் செயல்வாத வீதி நாடக அளிக்கை நிகழ்த்தப்பட்டது.



பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான 16 நாள் செயல்வாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு இருதயபுர தேவலய வீதி முன்றலில் செயல்வாத வீதி நாடக அளிக்கை நிகழ்த்தப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான 16 நாள் செயல்வாதத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று பெண்கள் அரங்கம் ஏற்பாட்டில் அக்கரைப்பற்றில் செயல்வாத வீதி நாடக அளிக்கை நிகழ்த்தப்பட்டது.

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான 16 நாள் செயல்வாதத்தை முன்னிட்டு வவுனியாவில் செயல்வாத வீதி நாடக அளிக்கை நிகழ்த்தப்பட்டது.

இம்மாதம் 10ஆம் திகதி பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான 16 நாள் செயல்வாதத்தை முன்னிட்டு மன்னார் பெண்கள் அபிவிருத்தி மன்ற ஏற்பாட்டில் செயல்வாத வீதி நாடக அளிக்கை நிகழ்த்தப்பட்டது.

**2012 மார்ச்**

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு 08ஆம் திகதி செங்கலடி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இச்செயல்வாத வீதி நாடக அளிக்கை செங்கலடிச் சந்தையில் நிகழ்த்தப்பட்டது.

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு அனர்த்த முகாமைத்துவ பெண்கள் கூட்டமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட "இரவுகளை மீட்டெடுப்போம்" எனும் தலைப்பில் மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற எழுச்சி ஊர்வலத்தில் இச் செயல்வாதப் பாடல் அளிக்கைகள் இடம்பெற்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் பொருட்டு பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பினால் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடாத்தப்பட்ட நிகழ்வில் இச் செயல்வாதக் குழுவானது தனது செயல்வாதப் பாடல்களை அளிக்கை செய்திருந்தது.



**2012 நவம்பர்**

கொழும்பு காலிமுகத்திடலில் ஒரு கோடிப் பெண்கள் எழுச்சி மற்றும் பால்நிலை வன்முறைகளைத் தடுத்தலுக்கான மன்றம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட பெண்களுக் கெதிரான வன்முறைகளுகு எதிரான 16 நாள் செயல்வாத நிகழ்வில் இச் செயல்வாத ஆற்றுகையின் சில பாடல்கள் அளிக்கை செய்யப்பட்டன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான 16 நாள் செயல் வாதத்தை முன்னிட்டு எமது இச்செயல்வாதமானது மட்டக்களப்பில் சீலாமுனை, கருவேப்பங்கேணி, நாவற்கேணி போன்ற கிராமங்களில் சமத்துவமாக வாழுகின்ற சில குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து அவர்களது வீடுகளுக்கு விஜயம்செய்து செயல்வாதப் பாடல்கள் பாடி பயன்தரு மரக்கன்றுகளை நட்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டது.

**2013 பெப்பிரவரி**

ஒரு கோடி பெண்கள் எழுச்சி தினத்தை முன்னிட்டு 14 ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்ற எழுச்சி ஊர்வலத்தில் இச் செயல்வாத்தின் அங்கத்தவர்கள் பங்குபற்றியதோடு ஓவியர் நிர்மலவாசன் அவர்களது கயிற்றில் தொங்கும் பெண்களின் முகங்கள் எனும் ஓவிய நிர்மாணமும் காட்சிப்படுத்தப்பட்டது.



**2014 மார்ச்**

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாதமானது சமத்துவத்திற்கான ஆண்களின் குரல் என்று மாற்றமடைந்தது.

மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு மூன்றாவது கண் நண்பர்கள் வட்டத்தின் சமத்துவத்திற்கான ஆண்களின் குரலானது மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் பெண்கள் தின நிகழ்வை கமலா வாசுகி அவர்களது தலைமையில் கொண்டாடியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று கவிதைகள்

**மோ. குகதாஸ்**

## ஆதிக்கச் சிந்தனையை அகற்றுவோம்

என் நண்பனே - இன்று
நான் சொல்வதை
நீ கேள்.
பகுத்தறிவுக்கு உட்படாத
ஆணாதிக்கச் சிந்தனையால்
பெண்கள் ஒடுக்கப்படுகின்றார்கள்.
வீட்டிலே கணவனால்
ஊரிலே சாதியால்
மதக்கொள்கைகளால்
பெண்களின் உரிமைகள்
மறுக்கப்படுகின்றன.
நண்பனே - இன்று
நான் சொல்வதை
நீ கேள்.
ஒரு மரம் வளர
நீரும் காற்றும் சூரிய ஒளியும்
வளமான மண்ணும் வேண்டும்.
ஆண்களைப் போலவே
பெண்களும் - உலகில்
வாழப் பிறந்தவர்கள்.
உணர்ச்சிகளும்
உணர்வுகளும்
ஆண்களுக்கு மட்டுமல்ல
பெண்களுக்கும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் சமூகத்தில் உயர
ஆண் ஆதிக்கச் சிந்தனையை
இன்றே தகர்த்தெறிவோம்.

## 2. உன் விடுதலைக்காய்

இருள்களைக் கண்டு
நீ அஞ்சாதே
விடிவுகள் தொலைதூரத்தில்
இல்லை.
உனக்கான நேரமிது
வீரத்தோடும் விவேகத்தோடும் வா
உன் உரிமை பற்றி பேச.
காலங்களின் நிகழ்வுகள்
உனக்காகவே அழுகிறது.
காற்று வீசும் போதே
உனக்கான பதில் கிடைக்கும்.
வீட்டுக்குள்ளே அடி வாங்கியது போதும்
இதுவரை உன்னை ஏமாற்றும்
ஆணாதிக்கச் சிந்தனை
தகர்த்தெறிந்து எழுந்திடுவோம்
நாளைப் பொழுதினில்.

## 3. ஏய்!

சமுதாயமே சுதந்திரம் வேண்டும் என்று போராடி
சுதந்திரத்தை வென்றெடுத்தாய்.
மனித குலத்தின் அத்திபாரமான பெண்ணிற்காக
எப்போது போராடப் போகிறாய்?
வன்முறை என்ற பெயரில் நடக்கும் யுத்தத்தில்
பெண்ணினம் அழிந்த பிறகா .....
நீ போராடப்போகிறாய்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியாயக் கும்மி

ஜோ. கருணேந்திரா

உண்மையை இன்றே உரைத்திடவே - நல்ல
ஊக்கமாய் நாங்கள் எழுந்து விட்டோம்.
உண்மையை நன்றாய் உரைத்திடவே - நல்ல
இதயங்களும் நன்றாய் வாழ்ந்திடுமே.
தந்தன தானன தானானே .....

சமமான உறவு தனைப்பேண - இங்கே
சமத்துவம் தானாய் வளர்ந்திடுமே
சமத்துவம் என்றே சொல்லும் போது - இங்கே
பால்நிலை என்பது முக்கியமே.
தந்தன தானன .....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் வன்முறை நிற்கவேண்டும் - என்று
பாருலகெங்கிலும் கோஷமுண்டு
பாலியல் வன்முறை நிற்கவில்லை - இந்த
பாருலகென்றோ மடிந்து போகும்.

தந்தன தானன .....

ஊரினில் சண்டைகள் வந்து விட்டால் - இந்த
ஊரார் அனைவரும் ஒன்று சேர்வர்
வீட்டிலே பெண்ணுக்கு அடிவிழுந்தால் - இங்கே
கேட்பதற்காருண்டு சொல்லுங்களே

தந்தன தானன .....

வேலைகள் வேலைகள் என்று சொல்லும் - இந்த
ஆடவர் இன்னமும் திருந்தவில்லை
வீட்டினில் வேலைகள் செய்துவிட்டால் - அந்த
பெண்ணுக்கு ஊதியம் தந்தாவிட்டீர்.

தந்தன தானன .....

மாற்றங்கள் என்னென்று சொல்லக் கேளும் - இங்கே
மாறுவதங்கென அறிந்து கொள்ளும்
மாறுவதெங்கென அறிந்து கொண்டால் - அந்த
மாற்றங்கள் தானாய் நிகழ்ந்துவிடும்.

தந்தன தானன ......

ஆண்களும் பெண்களும் சரிநிகராம் - இந்த
பாரினில் உண்மையை ஏற்றுக் கொள்வீர்
பெண்களை அடிமையாய் பார்த்துவிட்டால் - இந்த
பூமியில் உண்மைகள் செத்துவிடும்.

தந்தன தானன ......

பெண்களும் இங்கே படிக்க வேண்டும் - அந்த
கல்வியில் தன்னிலை நிற்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிலை நிற்கின்ற பெண்களை - இங்கே
பார்த்து அறிவுகொள் மானுடமே

தந்தன தானன ......

பெண்ணென்றால் பேதை எனச் சொல்லும் - இந்த
பேதமை இங்கே மறைய வேணும்
பெண் புத்தி பின் புத்தி எனக் கூறும் - இந்த
மடமையும் இங்கு மறைய வேணும்.

தந்தன தானன ......

பெண்களும் மனிதர்கள் என்று சொல்லி - நல்ல
மேன்மையை உலகுக்கு எடுத்துரைக்க
பெண்களின் அடிமைத்தளை உடைக்க - இந்த
பூமியில் மாந்தர்கள் ஒன்று சேர்க.

தந்தன தானன ......

கேட்டுக் கொள்ளுக மானுடமே - இந்த
பூமியில் பெண்களும் சரிசமமாம்
பெண்களே இல்லாத பூமியை- இங்கே
நினைத்துப் பார்த்திட முடியுமோ நாம்

தந்தன தானன ......

பார்த்திருந்தவர் வாழ வாழி - இங்கு
பெண்ணின் உரிமைகள் வாழ வாழி
பெண்ணின் துயர்கள் பகிர்ந்து கொள்ள வந்த
பூமியின் மாந்தர்கள் வாழ வாழி.

தந்தன தானன ......

கேட்டிருந்தவர் வாழ வாழி - இந்த
பூமியில் சமத்துவம் வாழ வாழி
பெண்களுக்கெதிரான வன்முறை இல்லாத
உலகம் உருவாக வாழி.

தந்தன தானன ......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களுக்கெதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவருதலை நோக்கிய எமது பாதையை நாமே வடிவமைப்போம்.

ஆக்கம் : கமலா வாசுகி

தமிழில் - ஜோ. கருணேந்திரா

### கற்கைத்திட்டம்.

**முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த ஆண்களுக்கான பயிற்சிப்பட்டறை.**

பெரும்பாலான தெற்காசிய நாடுகளில் வீட்டு வன்முறைகள் தனிப்பட்ட விடயமாகக் கருதப்படுகின்றது. இதனை எதிர்கொள்வதற்கும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுத்தலுக்குமான கலந்துரை யாடல்களை முன்னெடுப்பது மிகவும் அவசியமானதாகும். இக்கலந்துரையாடல்கள் பெண்கள் குழுக்களோடு மட்டுப்படுத்தப்படாது பரந்த சமூகத்துடனும் முன்னெடுக்கப் படல் வேண்டும். அந்தவகையில் சமூகத்தின் அடிப்படைப் பங்குதாரர்களுள் ஒருவரான ஆண்களுடனும் இக்கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுதல் முக்கிய மானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக ஆண்களைப் பிரச்சினையின் பங்காளிகளாக அல்லாமல் இதனுடைய தீர்விற்கான பங்காளிகளாளக் கருதியே இவ்வகைக் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப் படல் வேண்டும்.

இக்கற்கைத் திட்டமானது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேச தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த ஆண்களுக்காக வடிவமைக்கப பட்டுள்ளது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் காலங்காலமான சாதி, வகுப்பு, இன, மத, பால்நிலை அடிப்படையிலான பாகுபாடுகளை உட்பொதிந்து வைத்துள்ள சமூகங்களைக் கொண்டவை. அத்துடன் மூன்று தசாப்த கால இனத்துவ முரண்பாடுகளாலும் உள்நாட்டு யுத்தத்தாலும் பாதிக்கப்பட்டவை.

இந்தக் கற்கைத்திட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் இதன் எழுத்தாளரால் இலங்கையின் பலபகுதிகளிலும் பெண்கள் மற்றும் ஆண்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சிகளுக்காக உருவாக்கப் பட்டவை. சில பகுதிகள் எழுத்தாளர் பங்குபற்றிய பயிற்சி நெறிகளிலிருந்து உள்வாங்கப்பட்டுள்ளதுடன் அவை இலங்கையின் சூழலுக்கேற்ற வகையில் மாற்றியமைக்கப் பட்டுள்ளன. ஆயினும் அப்பயிற்சிகள் இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சிப்பட்டறைகளில் பரீட்சித்துப் பார்க்கப்பட்ட பின்னரே இக்கற்கைத்திட்டத்தில் உள்வாங்கப் பட்டுள்ளன.

இலங்கையில் பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைகள் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப் படுகின்றனவே தவிர அவை சமூகப் பிரச்சனைகளாகக் கருதப்படுவதில்லை. இலங்கை அரசால் 2005ஆம் ஆண்டில் வீட்டு வன்முறைகளுக்கெதிரான தடைச்சட்டம் அமுலாக்கப்பட்டு பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் குறைப்பதற்காக பல்வேறு மட்டங்களில் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இந்தப் பிரச்சினை எந்தவகையிலும் குறைந்ததாகத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை. இதனால் பெண்களுடைய வாழ்க்கை பெருவாரியான எதிரிடையான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப் படுகிறது. மேலும் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளான வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வாழ்கின்ற பெண்கள் யுத்தத்தின் பின்னான காலப்பகுதிக்கேயுரிய வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படக்கூடிய நிலையில் வாழ்வதோடு தம்முடைய வீட்டு வட்டத்தினுள் வீட்டு ஆண்களாலும் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர.

வடக்குக் கிழக்கில் வாழும் ஆண்கள் யுத்தகாலத்திலும் அதன் பின்னரும் அச்சம், வலுவற்ற தன்மை மற்றும் வன்முறைகள் போன்ற பாதகமான அனுபவங்களை ஆயுததாரிகளினாலும் அதிகாரத்திலுள் ளோராலும் எதிர்கொண்டுள்ளனர். ஆயினும் இவர்களில் பலர் இதேவிதமான பாதகமான விடயங்களை வீடுகளினுள் பெண்கள் அனுபவிப்பதற்கு காரணமாகின்றனர். வுன்முறையை மேற்கொள்ளுபவர் ஆயுததாரியோ, வேற்றினத்தவராகவோ, கணவனாகவோ யாராகவோ இருப்பினும் அது தோற்றுவக்கும் வலி ஒன்று தான். குடும்ப அங்கத்தவரால் குறிப்பாக கணவன்மாரால் ஏற்படுத்தப்படும் வலியும் பாதிப்பும் குடும்பம் என்கின்ற காரணத்தாலோ கலாசார காரணங் களாலோ குறையப் போவதில்லை. இதனடிப்படையில் பெண்கள் மீதான வன்முறைகளையும் அதன் பாதிப்பக்களையும் ஆண்கள் தமது அனுபவங்களிலிருந்து புரிந்து கொள்வதற்கு இந்த கற்கைத்திட்டம் உதவி செய்யும்.

இக் கற்கைத்திட்டமானது போராலும் முரண்பாடு களாலும் பாதிக்கப்பட்ட இச்சமூகங்களைச் சேர்ந்த ஆண்களை வன்முறைக்குள்ளானவர்கள் என்ற நிலைக்கும் வன்முறையாளர்கள் என்ற நிலைக்கும் இடையில் பயணிக்கச் செய்வதன் ஊடாக வன்முறையின் தாக்கங்களை உணரவைக்கும் நோக்குடன் மிகவும் அவதானமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது தாம் அனுபவித்த வன்முறை மற்றும் அது பற்றிய அச்சம் என்ற நிலையிலிருந்து வீட்டு வன்முறைகளையும் அவற்றின தாக்கங்களையும் நோக்கும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமியச் சமூகங்களைச் சேர்ந்த பங்குபற்றுனர்களை பயிற்சிகளிலும் கலந்துரையாடல் களிலும் உள்வாங்கக் கூடிய வகையில் இக் கற்கைத்திட்டமானது இலகுவான வழிமுறைகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. விடயங்கள் இலகுபடுத்துனரால் திணிக்கப்படுவதாக அன்றி பங்குபற்றுனர்கள் பயிற்சிகளினூ டாகத் தங்களது பிரச்சினைகளை தாமே அடையாளம் காணுதலுக்கும் அதற்கான தீர்வுகளைக் கண்டறிதலுக்கும் உரிய வகையில முறையியல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்கைத்திட்டமானது இலங்கைச் சூழலமைவுக்கேற்ப போர் நிலவிய பகுதிகளாகிய வடக்கு அல்லது கிழக்கைச் சேர்ந்த ஆண்களுக்காக வடிவமைக்கப் பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இலங்கையிலிருந்து பெறப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் வரையப்பட்டுள்ளது.

இந்தக் கற்கைத்திட்டத்தை இலங்கையைப் போன்ற பால்நிலை பாகுபாடுகளையும் சாதி, இன, மத, வர்க்க ரீதியான முரண்பாடுகளின் அனுபவங்களையும் உடைய ஏனைய நாடுகளிலுள்ள சமூகங்களிற்கு ஏற்றவகையில் மாற்றி பாவிக்கலாம்.

**நன்றிகள் :**

**பெண்நிலைவாதம், பால்நிலை சமத்துவம் சார்ந்த விடயங்களை அறியவும் அவற்றைப் பகுப்பாய்வு செய்து ஒரு பயிற்சியாளராக நான் மாறுவதற்கும் தூண்டுதலாக இருந்த பேராசிரியர் சித்ரலேகா மௌனகுரு, கம்லா பாசின் போன்ற இன்னும் பல சகோதரிகளுக்கும் 1998ம் ஆண்டிலிருந்து இன்றுவரை என்னுடைய பயிற்சிப் பட்டறைகளில் பங்குபற்றி பயிற்றுவிப்பாளராக எனது அறிவையும் திறனையும் வளர்த்துக்கொள்வதற்கு உதவிய பெண்கள் ஆண்கள் அனைவருக்கும் நன்றிகள். சிட்னி பல்கலைக்கழகத்தின் முதுகலைமாணிப் பட்டத்துக் கான ஒரு அளிக்கையாக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தக்கையேட்டை நான் தயாரித்த போது இத்ததைகய ஒரு கையேட்டின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து இதற்கு அதிஉயர் புள்ளிகளிட்ட எனது பல்கலைக்கழக ஆசிரியரகளுக்கும் நன்றிகள். மேலும் பெண்களது உரிமைகள் சார்ந்த ஆண்களுடனான உரையாடலை இந்தக்கையேட்டை முழுமையாக மொழிபெயர்த்து தந்த ஜோ. கருணேந்திராவுக்கும் என்து நன்றிகள்.**

பயிற்சிக்கையேடு

**பங்குபற்றுனர்கள்** : வீட்டு வன்முறைகள் அதிகமாக காணப்படுகின்றதும், சாதிய, வகுப்பு, இன மத மற்றும் வர்க்க ரீதியான அதிகார உறவுகளின் அடிப்படையில் உள்ளக முரண்பாடுகள் காணப்படுகின்ற சமூகங்களைச் சேர்ந்த 15தொடக்கம் 20 ஆண்கள்.

**தேவையான காலம் : மூன்று நாட்கள்.**

**நோக்கம்** : அவரவருடைய சமூகங்களில் நிலவும் பெண்களுக்கெதிரான (வீட்டு) வன்முறைகளையும் அவற்றின் விளைவுகளையும் ஒரு பிரச்சனையாக ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை ஏற்படுத்தலும், (வீட்டு) வன்முறைகளற்று வாழும் பெண்களது உரிமை பற்றிய புரிந்துணர்வை ஏற்படுத்தலும், அவரவரது சமூகங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாமல் செய்வதற்கான உணர்வு பூர்வமான ஈடுபாட்டை ஏற்படுத்தலும்.

**தேவையான பொருட்கள்** : சுவரொட்டித் தாள்கள், வர்ணத் தாள்கள், வர்ணப் பேனைகள், சில கத்தரிக்கோல்கள், செலோடேப், பிசின் போன்ற பயிற்சிப் பட்டறைக்குத் தேவையான பொருட்கள் பெரிய போஸ்டர் பேப்பர்களில் வரையப்பட்ட இந்தக்கற்கைத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள வாறான படங்கள் வர்ண அட்டைகளில் வெட்டப்பட்ட வெவ்வேறு வடிவங்கள் (முக்கோணம், வட்டம், நட்சத்திரம்) அல்லது ஸ்டிக்கர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் நாள்

செயற்பாடு - 01.

விளையாட்டு - பெயர் கூறி அழைத்தல்

நேரம் : 45 நிமிடங்கள்.

---

**பயிற்சியின் நோக்கம்:** பங்குபற்றுனர்களுக்கு தளர்வான பயிற்சிப்பட்டறைச் சூழலை ஏற்படுத்தலும், பங்குபற்றுனர்களிடையே ஒவ்வொருவரினதும் பெயர்களை பரிச்சயப்படுத்தலும், ஒவ்வொருவரும் நல்லவிதமாகவோ மோசமாகவோ நடாத்தப்படும் போது எப்படி உணர்கிறார்கள் என்பது பற்றிக் கலந்துரையாடுவதற்கான களத்தினை உருவாக்கலும்.

---

**படிமுறை :**

1) எல்லாப் பங்குபற்றுனர்களும், இலகுபடுத்துனர்களும் எழுந்து ஒரு வட்டத்தில் நிற்பார்கள். ஓவ்வொரு பங்குபற்றுனர்களும் அவர்களுடைய பெயர்களை மற்றையவர்கள் எவ்வாறு உச்சரிக்க வேண்டும் என்று விரும்புகின்றார்களோ அவ்வாறு கூறித் தம்மை அறிமுகப்படுத்துவர்.

2) பெயர்களை அழைத்தலுக்கான ஒரு சுற்று நிறைவடைந் ததும் பங்குபற்றுனர்கள் வட்டத்திலுள்ள (எதிரிலுள்ளவராக இருந்தால நல்லது) மற்றைய ஒருவரது பெயரை அழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவர். பெயர்களை ஏதாவது ஒரு உணர்வுடன் (அதாவது அன்பாக, கோபமாக, இரக்கமாக, அச்சுறுத்துவதாக, கேலியாக, அதிகாரமாக....) அழைக்க வேண்டும். அவ்வாறு மற்றையவரால் அழைக்கப்படும் நபர் அசைவுடன் கூடிய ஒரு பிரதிபலிப்பைச் செய்யவேண்டும். குறிப்பாக அழைக்கப்படும் நபர் தன்னை அழைக்கும் விதம் பிடித்திருந்தால் அழைத்தவரை நோக்கியும் பிடிக்காவிட்டால் எதிர்த்திசையிலும் நடக்கலாம். ஒவ்வொரு பங்குபற்றுனரும் 2 - 3 தடவைகள் அசைவதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் இந்தச் சுற்று இரண்டு அல்லது மூன்று முறைகள் தொடர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துரையாடல் : பின்வரும் கேள்விகளின் அடிப்படையில் கலந்துரையாடல் வழிநடத்தப்படும். (அ) நாங்கள் எவ்வாறு எமது அன்பை, சந்தோசத்தை, கோபத்தை எமது பேச்சுத் தொடர்பாடலூடாக வெளிப்படுத்துகிறோம். (ஆ) அது எவ்வாறு மற்றைய வரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. (இ)வித்தியாசமான முறையில் அழைக்கப்படுதலினால் ஏற்படும் உணர்வுகள். (4) இவ்வாறு அழைக்கப்படுதல் எவ்வாறு வகை வகையான அதிகார உறவுகளை வெளிப்படுத்துகிறது?

**செயற்பாடு - 2**
**விளையாட்டு : மாறும் வட்டங்கள்**
**(அடையாளங்கள்)**
**நேரம்: 45 நிமிடங்கள்.**

**பயிற்சியின் நோக்கம் :** பயிற்சிப்பட்டறைக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்துதலும், ஒருவரைப் பற்றி மற்றவர் மேலும் அறிந்துகொள்ளலும், ஒவ்வொருவரும் தம்மை அடையாளப் படுத்தும் குழுமங்கள் ஒன்றாக மட்டும் இருக்காது என்பதைப் புரிந்துகொள்ளலும்.

**படி முறை :**

1) பங்குபற்றுனர்களை வட்டமாக நிற்குமாறு கேட்டுக் கொள்ளவும்.

2) இலகுபடுத்துனர் நடுவில் நின்று தான் குறிப்பிடப்படும் வகைகளின் அடிப்படையில் குழுவாகுமாறு அறிவிக்கவும். உதாரணமாக :

- கடவுளின் பெயர்களைத் தம் பெயர்களாகக் கொண்டவர்கள் ஒரு குழு ஏனையோர் இன்னொரு குழு.
- ஒரே பிரதேச செயலகப் பிரிவில் வசிப்பவர்கள் ஒரே குழுவாகவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திருமணமானவர்கள் - திருமணமாகி குழந்தைகள் உள்ளவர்கள் / திருமணமாகாதவர்கள்.
- பிறப்பால் ஒத்த சமயத்தவர்கள்.
- தொழில் ரீதியாக ஒத்த தொழில் உடையவர்கள்.
- சுனாமி போன்ற அனர்த்த அனுபவத்தின் அடிப்படையில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் - பாதிக்கப்படாதவர்கள்.
- முரண்பாட்டு அனுபவத்தினடிப்படையில் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டவர்கள்/பாதிக்கப்படாதவர்கள்.
  (இடையிடையே பால்நிலை சார்பங்கு பாத்திரங்களை உணர்த்தும் உதாரணங்களையும் அளிக்கவும்)
- சமைக்கத் தெரிந்தவர் - தெரியாதவர்
- மோட்டார சைக்கிள் ஓட்டத் தெரிந்தவர் - தெரியாதவர்
- தத்தமது சட்டை பட்டனைத் தைக்கத் தெரிந்நதவர் - தெரியாதவர்

3. கலந்துரையாடல் : இப்பயிற்சி தொடர்பான கருத்துக்களையும் சிந்தனைகளையும் பகிர்ந்துகொள்ளுமாறு பங்குபற்றுனர் களிடம் கேட்டுக்கொள்ளவும். பங்குபற்றுனர்கள் தங்களுடைய குழுக்களை தங்களுடையது என அடையும் போது எவ்வாறு உணர்ந்தனர். இதற்கு முன்னர் உணர்ந்து கொள்ளாம லிருந்த தற்போது கண்டுபிடித்த பொது அடையாளமுடைய குழுவில் இணைந்தது தொடர்பாக எவ்வாறு உணர்ந்தனர் - போன்ற கேள்விகளை பங்குபற்றுனர்களிடம் கேட்கவும்.

குறிப்பு : கலந்துரையாடலின் நோக்கம் பால்நிலை அடையாளங்களாக நாம் கருதும் விடயங்கள் உண்மையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் பகிரப்படக் கூடியவை என்பதை உணர்த்துவதாகும். உதாரணமாக பெண்களது வேலையாகக் கருதப்படும் சமையலை செயபவராக யாராவது சில ஆண்களும் இருப்பர். ஆண்களுக்குரியதாக கருதப்படும் வாகனம் ஓட்டுதல் தெரியாதவராக சில ஆண்கள் இருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு - 3**

**பயிற்சி : மனங்களைத் திறத்தல் : வன்முறைகள் (பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஏனைய வன்முறைகளினடிப்படையில் உணர்தல்.**

**நேரம்: 90 நிமிடங்கள்**

**பயிற்சியின் நோக்கம்:** சமூகத்தில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட வன்முறைச் சம்பவங்களையும் அவற்றுக்கு காரணமான அதிகார உறவுகளையும் சுயஅனுபவங்களின் அடிப்படையில் அடையாளம் காணலும் புரிந்து கொள்ளுதலும்.

**படி முறை:**

1) தமது சுயஅனுபவங்களை மனம் விட்டுப் பகிர்ந்துகொள்ளக் கூடிய பங்காளருடன் இருவர் இருவராக இணைந்து கொள்ளுமாறு பங்குபற்றுனர்களைக் கேட்டுகொள்ளவும்.

2) தமது இதுவரையான வாழ்நாளில் அனுபவித்த இன்று வரை மறக்க முடியாதுள்ள ஒரு மோசமான வன்முறை அல்லது பாரபட்சம் பற்றி தத்தமது ஜோடிகளுடன் (சகபாடியுடன்) பகிர்ந்துகொள்ளுமாறு கேட்கவும். (15 நிமிடங்கள்)

3) இப் பகிர்தல் முடிவடைந்தவுடன், உவ்வொரு ஜோடியையும் தத்தமது சம்பவங்களிலிருந்து பின்வருவனவற்றை அடையாளம் காணுமாறு கேட்டுக்கொள்ளவும்.

1. வன்முறையாளருக்கும் வன்முறைக்குட்படுத்தப் பட்வருக்கும் இடையேயான உறவு.
2. வன்முறையாளரை வன்முறை செய்யத் தூண்டுவதாக அமைந்த அதிகார உறவு - காரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலகுபடுத்துனருக்கான குறிப்புக்கள் :**

வன்முறைக்கான மேலோட்டமான உடனடிக் காரணிகளை விடுத்து வன்முறைக்கான உண்மையான, குறிப்பான காரணங்களைக் கண்டறிவதற்கான வகையில் பங்குபற்றுனர்களுக்கு உதவி செய்யவும். மேலும், அதிகார உறவை, அது எவ்வாறு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் வன்முறையாளருக்கு மற்றவர் மீதான வன்முறையை மேற்கொள்வதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குகின்றது என்பதை விளங்க வைக்க எத்தனிக்கவேண்டும். மாறாக வன்முறைக்கான நியாயப்படுத்தலைக் கண்டறிய எத்தனிக்கக்கூடாது.

உதாரணமாக : ஒரு ஆண் குடிபோதையின் காரணமாக பொலிஸ் ஒருவரால் அடிக்கப்படுவாராயின், அது பொலிஸின் பதவிசார் அதிகாரமாக இருக்கலாமேயன்றி குடிபோதை காரணமாகாது. போதையிலிருப்பதானது அவரின் மனித உரிமை மீறப்படுவதற்கான காரணமாகாது. உண்மையில் அரசாங்கத்தால் பெலிஸிற்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை பிழையாகப் பாவித்ததே காரணமாகும்.

இதேமாதிரியாக, குண்டுவெடிப்பின் சந்தேக நபராக இராணுவத்தால் கைதாகிய ஒருவர் சித்திரவதைக்கட் படுத்ப்பட்டால், தேசியப்பாதுகாப்பு என்பது அவரது சித்திரவதைக்கான, அவருக்கொதிராக மனித உரிமை மீறலுக்கான நியாயப்படுத்தலாக அமைந்திருக்காது. மாறாக குறிப்பிட்ட அந்நபரின் அரசியல், இனத்துவ அல்லது ஏனைய அடையாளம் காரணமான இரண்டாம்பட்ச நிலையும் அரசால் இராணுவத்துக்கு வழங்கப்பட்ட அதீத அதிகாரங்களுமே காரணமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| **வன்முறையாளர், வன்முறைக்குட் படுத்தப் படுபவர் மற்றும் காரணமான அதிகாரம் தொடர்பான உதாரணங்கள்** | | |
|---|---|---|
| வன்முறையாளர் | வன்முறைக்குட் படுத்தப்படுபவர் | இருவருக்குமிடை யேயான அதிகார உறவிற்கான காரணி |
| தந்தை | மகன் | கலாச்சாரம் - குடும்ப அதிகாரக்கட்டமைப்பு - வயது |
| கணவன் | மனைவி | ஆணாதிக்கம் |
| இராணுவம், பொலிஸ் ,ஆயுதப்படை | சாதாரண சமூக ஆண் | அரசியல் வேறுபாடு, மத, இன, வகுப்பு, சாதிய வேறுபாடுகள் |
| நிலப்பிரபு | தொழிலாளி | வகுப்பு மற்றும் வளங்கள் மீதான உரிமை |
| சண்டியன் - கட்டுமஸ்தான ஆண் | சாதாரண ஆண் | உடலியல் வலு |

4) ஒவ்வொரு சோடிக்கும் மூன்று வெவ்வேறு நிறங்களையுடைய காகிதத் துண்டுகளை வழங்கவும். சிவப்பு நிறக் காகிதத்தில் வன்முறையாளரையும், பச்சை நிறக் காகிதத்தில் வன்முறைக்குட்படுத்தப்படுபவரையும், சிவப்பு நிறத்தில் வன்முறைக்கான காரணத்தையும் எழுதுமாறு கேட்டுக் கொள்ளவும். (வெவ்வேறு விடயங்களை நிறங்கள் மூலம் வேறுபடுத்த நிறப்பேனைகளையோ வேறு முறைகளையோ கையாளலாம்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) கீழே காட்டப்பட்டவாறு பெரிய சுவரொட்டி ஒன்றை தயார் செய்யவும். பின்பு பங்குபற்றுனரகளை ஜோடிகளாக ஒன்றாக வருமாறு அழைத்து அவர்கள் எழுதிய 3 விடயங்களையும் சுவரொட்டியில் காட்டப்பட்டுள்ள வகைப்படுத்தலுக் கேற்றவாறு ஒட்டுமாறு கூறவும். வகைப்படுத்தல்களானவை: வன்முறையாளர், வன்முறைக்குட்படுத்தப்படுபவர், அதிகாரம் வழங்கும் காரணி (படத்தைப் பார்க்கவும்)




படம் 1

கலந்துரையாடல்: (அ) அவர்கள் அனுபவித்த வன்முறை களின் பொதுத்தன்மைகள் (ஆ) வன்முறை களுக்கு வெவ்வேறு அடையாளங்கள் எவ்வாறு காரணமாகின்றன (இ) வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இந்த வித்தியாசங்கள் அவை எவ்வாறு வன்முறைகளுக்கு காரணமாக அமைகின்றன (ஈ) ஒவ்வொருவரது அடையாளங்கள், வித்தியாசங்கள் சந்தர்ப்பங்கள் வெவ்வேறாக இருப்பினும் வன்முறை தோற்றுவிக்கும் அனுபவங்கள் ஒன்று என்பதனை விளக்கும் வகையில் கலந்துரையாடலை நகர்த்திச் செல்க.

**பயிற்சியின் முடிவில் படம் 1ஐ பயிற்சிப்பட்டறை நடக்கும் மண்டபத்திலேயே காடசிப்படத்தி வைக்கவும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு - 4**

**பாத்திர நடிப்பு : அதிகார உறவுகள்**

**நேரம் : 90 நிமிடங்கள் (பங்குபற்றுனர்களின் எண்ணிக்கையடிப்படையில்)**

**நோக்கம்:** சமூகங்கள் தோற்றுவித்திருக்கும் பல்வேறு அதிகார உறவுகளையும் மனிதர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எதிர் கொள்ளும் அடக்குமுறை மற்றும் வன்முறைகளுக்கு இவை காரணமாவதையும் புரிந்து கொள்ளல்.

குறிப்பிட்ட சமூகத்தில் காணப்படுகின்ற அதிகார உறவுகளை வெளிப்படுத்தக்கூடிய இருவர்களைக் கொண்ட பாத்திரங்களை அடையாளம் கண்டு ஒவ்வொரு பாத்தரங்களையும் தனித்தனித் துண்டுக் காகிதங்களில் எழுதி வைத்திருக்கவும்.

**உதாரணங்கள்:**

விவசாயி - மனைவி (பால்நிலை அதிகாரம்)
பொலிஸ் - குடிகாரர் (அரச அதிகாரம்)
நிலப்பிரபு - தொழிலாளி (வகுப்பு அதிகாரம்)
கணவன் - மனைவி (பால்நிலை அதிகாரம்)
உத்தியோகத்தர் - அலுவலக உதவியாளர் (அலுவலக நிலை - வகுப்புரீதியான அதிகாரம்)
அலுவலக உதவியாளர் - மனைவி (பால்நிலை அதிகாரம்)
ஆண் ஆசிரியர் - பெண் மாணவி (பதவி - கல்வி - வயது),
குடிகாரர் - மனைவி (பால்நிலை அதிகாரம்)
பூசகர் - நிலப்பிரபு மத - சாதி)
உள்ளூர் அரசியல்வாதி - விவசாயி (அரசியல், வகுப்பு அதிகாரம்)
அரச சார்பற்ற நிறுவன ஊழியர் - ஆயுதப்படை (ஆயுத அதிகாரம் - அரசியல் அதிகாரம்),
அரச சார்பற்ற நிறுவன ஊழியர் - பெண் அலுவலக ஊழியர் (நிலை -கல்வி - பல்நிலை)
உள்ளூர் சமூகத் தலைவர் - அரச சார்பற்ற நிறுவன ஊழியர் (நிலை- கல்வி- வகுப்பு)
இராணுவ ஆண் - விவசாயி (அரச, இனத்துவ, ஆயுத அதிகாரம்)

இவ்வாறு எழுதப்பட்ட கடதாசிகளை மடித்து அல்லது சுருட்டி வைத்துக்கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி முறை**

1) பங்குபற்றுனர்களை சோடிகளாகச் சேருமாறு கேட்டுக்கொள்ளவும். பின்னர் ஒவ்வொரு சோடியையும் மடிக்கப்பட்ட அல்லது சுருட்டப்பட்ட கடதாசி ஒன்றை எடுக்கச்சொல்லவும்.

2) ஒவ்வொரு சோடியும் தாங்கள் எடுத்துக்கொண்ட சிட்டையிலுள்ள பாத்திரங்கள் இருவருக்குமிடையில் பொதுவாக நிகழக் கூடிய ஒரு சம்பவத்தை, நிகழ்வை நடித்துக்காட்ட வேண்டும். பாத்திரத்தின் பெயரைக் கூறக் கூடாது. (நடிப்பைத் தயார்படுத்த 10 □ 15 நிமிடங்கள் வழங்கவும்).

3) அனைவரும் வட்டமாக அமர ஒவ்வொரு சோடியாக தாங்கள் பெற்றுக்கொண்ட பாத்திரங்களை நடுவில் நடித்துக் காட்டுவர். ஏனையவர்கள் அவர்களது பாத்திரங்களை அடையாளம் காண வேண்டும். அவ்வாறு ஏனையவர்கள் அடையாளம் காணாத பட்சத்தில் மீளவும் அச் சோடி தங்களது அளிக்கையைச் சீர்செய்து அளிக்க வாய்ப்பு வழங்கப்படலாம். (அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும்).

4) கலந்துரையாடல் பின்வரும் சில ஆரம்பக்கட்டக் கேள்விகளுடன் கலந்துரையாடலைத் தொடங்கவும்.

ஒவ்வொரு சோடியினதும் பாத்திரங்களையும் அவர்களுக்கு இடையேயான உறவையும் இலகுவில் அடையாளம் காண உதவியது எது?

எந்தவிதமான செய்கைகள் அவர்களுக்கிடையேயான உறவைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளம் மற்றும் அதிகார உறவு தொடர்பான முன்னைய கலந்துரையாடலின் தொடர்ச்சியாக இக் கலந்துரையாடலை இலகுபடுத்தவும். இந்தக் கலந்துரையாடலில் குறிப்பிட்ட பாத்திரங்களை வெளிப்படுத்த அநேகமாக பங்குபற்றுனர்கள் வெவ்வேறுபட்ட பாரபட்சமான-அதிகார ரீதியான நிலைகளையே வெளிப்படுத்தியிருப்பர். அதனடிப்படையில் எவ்வாறு ஒருவரின் சமூக நிலையும் அதிகாரஉறவுகளும் இடத்திற்கிடம் சந்தர்ப்பத்திற்கு சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப மாற்றமடைகின்றது என்பதைக் கலந்துரையாடவும் (உ-ம்: பொது வெளியில் பொலிஸ் முன்னிலையில் அதிகாரமற்றவர்களாகக் காணப்படும் குடிகாரர்கள் தமது குடும்ப வட்டத்துள் மனைவி பிள்ளைகளை விட அதிகாரமுடையவர்களாக காணப்படுகின்றனர்)

**இலகுபடுத்துனருக்கான குறிப்புக்கள் :**

பங்குபற்றுனர்களை தமது சமூகத்தில் காணப்படும் உண்மையான நிலைமைகளைச் சித்தரிக்கும்படி கூறவும். அவர்கள் சிறப்பான இலட்சியத்தனமான தருணங்களைச் சித்தரிக்கக்கூடாது. மேலும் சினிமா அல்லது தொலைக்காட்சியில் சித்தரிக்கப்படும் பாத்திரங்களையும் அவர்கள் பிரதிபலிக்கக்கூடாது.

சமூகங்களில் வெவ்வேறு நபர்களுக்கு இடையேயான உறவுகளைப் பிரதிபலிப்பதற்கு அதிகார வெளிப்பாடுகளே இலகுவானவை என்ற கருதுகோளின் அடிப்படையில இந்தப்பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. தமக்களிக்கப்பட்ட பாத்திரங்களை பார்வையாளர் இலகுவாகப்புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நடிப்பவர்கள் தமது பாத்திரங்களில் அதிகார வெளிப்பாடுகளையே தெரிவு செய்வர் என்பது தொகுப்பாளரின் அனுபவமாகும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு: 5

பயிற்சி : வன்முறையின் தாக்கங்கள்.

நேரம்: 70 நிமிடங்கள்

**நோக்கம்:** தனிநபர், குடும்பம் மற்றும் சமூகங்கள் மீதான வன்முறைகளின் தாக்கங்களை தமது சுய அனுபவங்களினூடாக பங்குபற்றுனர்கள் பகுந்தறிதலும் புரிந்துகொள்தலும்.

**படி முறை :**

பங்குபற்றுனர்கள் முதலாவது பயிற்சியின் அதே இருவராக இப்பயிற்சியைத் தொடரலாம்.


1) தமது குடும்பத்தில், சமூகத்தில் மற்றும் தனிப்பட்ட ரீதியில் அனுபவித்த வன்முறையின் விளைவான உடலியல் மற்றும் உளவியல் தாக்கங்கள் தொடர்பாக தங்களது தனிப்பட்ட அனுபவங்களைக் கலந்துரையாடுமாறு கேட்டுக்கொள்ளவும். ஒவ்வொருவரும் தமது சொந்த நிலைமையை ஆராய்வதோடு, உண்மையான விளைவுகளை வெளிக்கொணர வேண்டும். தாங்கள் கலந்துரையாடிய ஒவ்வொரு விளைவுகளையும் ஒவ்வொரு காகிதத் துண்டுகளில் எழுத வேண்டும். (20 நிமிடங்கள்)

2) மேலே குறிப்பிடப்பட்ட சோடிகளை இரண்டு அல்லது மூன்று குழுக்களாக ஆக்கவும். அக்குழுக்களுக்கு போஸ்டர் காகிதங்களை வழங்கவும். பின்பு வழங்கப்பட்ட காகிதத்தில் ஒரு ஆணின் உருவத்தை வரையக் கூறவும்.

3) அந்த வரைபடத்தில் தனிப்பட்ட விளைவை உருவத்தின் உடல்பகுதியிலும், குடும்பத்தில் ஏற்பட்ட விளைவை உருவத்தைச் சுற்றியும், சமூக விளைவை அடுத்த வட்டத்திலும் உருவில் காட்டப்பட்டவாறு ஒட்டுமாறு பணிக்கவும். (உரு - 2) (15 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 2

4) சுவர்களில் போஸ்டர்களைக் காட்சிப்படுத்தக் கூறவும். குழுவைச் சேர்ந்த ஒருவர் தமது குழு அளிக்கையுடன் அளிக்கையாளராக நிற்க வேண்டும்.

5) பின்னர் ஒவ்வொரு குழுவினரையும் ஏனைய குழுவினரின் படங்களைப் பார்வையிடுமாறும் அவை சார்ந்து ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் குறிப்பிட்ட குழுவின அளிக்கையாளருடன் கலந்துரையாடுமாறும் கேட்டுக்கொள்ளவும்.

6) ஒருமித்த கலந்துரையாடல்: பின்வரும் முறையில் கலந்துரையாடலை இலகுபடுத்துக:

- வன்முறையின் வலி மனிதருக்கு மனிதர் வேறுபடுமா?
- சமூக மட்டத்தில் மேலுள்ள ஒருவரைவிட சமூக மட்டத்தில் கீழுள்ள ஒருவருக்கு வலி தாங்கும் சக்தி அதிகமா?
- இது போன்ற விளைவுகள் குடும்பத்தில் அல்லது சமூகத்தில் காணப்படுதல் நன்மையானதா?

**இலகுபடுத்துனருக்கான குறிப்புக்கள்:** சமூக, சாதி, வர்க்க, பால் வேறுபாடுகளுக்கும் அப்பால் மனிதர் என்ற வகையில் வலி என்பது அனைவருக்கும் பொதுவானதென்பதும் வன்முறையின் தாக்கம் அனைத்து மட்டத்திலுமே தீங்கானது என்பதை நோக்கியும் கலந்துரையாடலை நகர்த்த வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி: - எங்களிலுள்ள வலு

நேரம்: 45 நிமிடங்கள்

| |
|---|
| **நோக்கம்:** ஒரு நம்பிக்கையான சாதகமான மனநிலையுடன் நாளை நிறைவு செய்தல் |

**படி முறை :**

1). (தனிப்பட்ட பயிற்சி) வன்முறைச் சம்பவத்திலிருந்து மீள்வதற்கு அல்லது தப்புவதற்கு உதவக்கூடிய தங்களுடைய வலுவாக தாங்கள் நினைக்கும் 3 விடயங்களை யோசிக்குமாறு பங்குபற்றுனர்களைக் கேட்டுக்கொள்ளவும். முதலாவது வலு அவர்ளுடைய தனிப்பட்ட அவர்களுக்குள்ள வலுவாகவும், இரண்டாவது அவர்களுடைய குடும்பத திலிருந்கு பெறக்கூடிய வலுவாகவும், மூன்றாவது அவர்களுடைய சமூகத்திலிருந்து பெறக்கூடிய வலுவாகவும் இருக்கலாம். இவற்றை ஒவ்வொரு வர்ணத் துண்டுக காகிதங்களில் எழுதுமாறு கேட்கவும்.

2) முதற் பயிற்சியில் பாவித்தது போன்று ஒரு பெரிய போஸ்ட்ர் பேப்பரில் வரையப்பட்ட ஆணின் வரைபடத்தில் பங்குபற்றுனர்கள் ஒவ்வொருவரையும் தாங்கள் எழுதிய தமது வலுக்களை ஒட்டச் சொல்லவும்.

3) இந்தப் படங்களை மதிப்பீடு செய்து தங்களுடைய பலங்களை (வலுக்களை) மதிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளவும்.

| |
|---|
| **இலகுபடுத்தனருக்கான குறிப்பு:** இந்தப்பயிற்சி வன்முறையற்ற வாழ்வை வாழ்வதற்கான தனிப்பட்ட, குடும்ப-சமூகம்சார் வலுவைக்காட்டுவதாக அமையும். இதற்கு நீண்ட கலந்துரையாடல் நேரம் செலவிடத் தேவையில்லை. இந்தப் படத்தை பயிற்சி மண்டபத்தில் காட்சிப்படுத்தி களப்பயிற்சி முடியும் வரை வைத்திருக்கவும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு - 7

பங்குபற்றுனர்கள் களப்பயிற்சியில் ஈடுபாட்டுடன் பங்குபற்றியமைக்கு நன்றி தெரிவித்து அன்றைய நாள் பயிற்சியை நிறைவு செய்து கொள்ளவும்.

## இரண்டாம் நாள்

செயற்பாடு - 8
பயிற்சி: முன்னைய நாளை மீட்டல்
நேரம்: 30 நிமிடங்கள்

**பயிற்சியின் நோக்கம்:** முன்னைய நாளின் பயிற்சிகளின் முக்கியமான விடயங்களை மீட்டலும், ஞாபகப்படுத்தலும். .

**படி முறை :**

1) பங்குபற்றுனர்கள் வட்டமாக நிற்கவேண்டும். நேற்றைய தினம் அறிந்துகொண்டவற்றில் அல்லது கலந்துரையாடியவற்றில் அவர்களது மனதில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு விடயத்தை அல்லது செயற்பாட்டை நினைத்துக்கொள்ளச் சொல்லவும்.

2) ஒரு பந்தை ஒரு பங்குபற்றுனருக்கு எறியவும். பந்தைப் பெற்றுக்கொள்பவர் தான் யோசித்துள்ளதை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

3) பின் பந்தை இன்னொருவருக்கு எறிய வேண்டும். இவ்வாறு ஒவ்வொருவரும் பந்தைப் பெற்றுக்கொள்ளும்போது தங்களது விடயங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு - 9

**பயிற்சி : நாணயத்தின் மறுபக்கத்தைப் பார்த்தல்**

**நேரம் : 60 நிமிடங்கள்**

**நோக்கம் : வன்முறையாளராக வன்முறையையும் அதிகார உறவுகளையும் ஆராய்தல்**

**செயன்முறை :**

1) முன்னைய நாளில் சேர்ந்திருந்த சோடியோடு மீண்டும் சேர்ந்துகொள்ளுமாறு பங்குபற்றுனர்களைக் கேட்டுக் கொள்ளவும்.

2) ஒரு வன்முறையாளராகத் தமக்குள்ள தனிப்பட்ட அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளவும். அதாவது வாழ்க்கையின் ஏதாவது சந்தர்ப்பத்தில் யாராவது ஒருவர்மீது தான் மேற்கொண்டதாகக் கருதும் ஒரு வன்முறை பற்றி பகிரச் சொல்லிக் கேட்கவும். வன்முறைக்குள்ளானவர் பற்றியும் அவ்வாறு வன்முறை மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக அமைந்துள்ள அதிகார உறவுகள் பற்றியும் கலந்துரையாடுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளவும்.

3) அனைவரையும் மீள ஒரு பெரிய வட்டமாக்கிக் கொள்ளவும்.


**செயற்பாடு 3ல் தயாரிக்கப்பட்ட படம் 1 இலேயே இநதப்பயிற்சி தொடரும்.**

4) ஒவ்வொருவருக்கும் 3 அட்டைகளைக் கொடுக்கவும் ஒரே நபருக்கு ஒரே வடிவங்களைக கொடுக்கவும்) ஒவ்வொரு அட்டையும் முறையே (அ) வன்முறையாளரையும், (ஆ) வன்முறைக்குட்படுத்தப்பட்டவரையும், (இ) வன்முறைக்கான அதிகார உறவுகளையும் பிரதிபலிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) தாம் பகிர்ந்து கொண்ட சம்பவத்தின் அடிப்படையில் மேற்படி 3 விடயங்களையும் படம் 1 இன் வகைப்பாடு களுக்கேற்ற ஒட்டுமாறு பங்குபற்றுனர்களை ஒவ்வொரு வராகக் கேட்டுக் கொள்ளவும். உதாரணமாக: ஒரு பங்குபற்றுனர் தம்மை ஒரு கணவனாகவும், தன்னால் வன்முறைக்குட்படுத்தப்பட்டவர் மனைவியாகவும் மற்றும் அதற்கான அதிகாரம் ஆணாதிக்கமாகவும் இருப்பின் 3 நட்சத்திரங்களையும் படம் 1 இல் குறிப்பிட்ட இடத்தில் ஒட்ட வேண்டும். (படம் 3 ஐப் பார்க்கவும்)




படம் 3

6) கலந்துரையாடல் : அதிகார உறவுமுறைகள் சார்ந்து முன்னைய நாளின் தொடர்ச்சியாக முன்னெடுக்கவும். குறிப்பாக வன்முறைக்குட்பட்டவர்களாகவும் வன்முறையாளர்களாகவும் உள்ள இரண்டு நிலைகளுக்கிடையே ஒரே நபர் பயணிக்கும் போது அவருள் நிகழும் மாற்றங்களைப் பற்றி கலந்துரையாடலை நகர்த்தவும். மேலும், ஆண்களாக சமூகத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப்படிநிலையில் ஒவ்வொருவரும் தமது நிலையை உறுதிப்படுத்த எவ்வாறு அநீதியான வன்முறையான முறைகளைப் பாவிக்க வேண்டியுள்ளது பற்றியும் இதன் சவால்கள் பற்றியும் கலந்துரையாடவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு – 10
பயிற்சி: வீட்டு வன்முறைகளின் பரவல்
நேரம்: 60 நிமிடங்கள்

**நோக்கம்** : வீட்டு வன்முறைகளை ஏனைய வன்முறைகளோடு ஒப்பிடுவதோடு அதனுடைய விளைவுகளை உணர்ந்து கொள்ளல்.

**படி முறை:** அளிக்கை மற்றும் பங்குபற்றலுடனான கலந்துரையாடல்

1. வீட்டு வன்முறைகள் என்றால் என்ன என்பதனை விளக்குக. (மிகவும் எளிய வரைவிலக்கனங்களும், தகவல்களும் சுவரில் காட்சிப்படுத்தப்படலாம்)

2. வீட்டு வன்முறைகள் மற்றும் பெண்களுக்கெதிரான பொதுவான வன்முறைகள் தொடர்பாக தொடர்புடைய கிராம, நகர, நாடு மற்றும் உலக ரீதியில் கிடைக்கக்கூடிய தரவுகளை பங்குபற்றுனர்களுக்கு அளிக்கை செய்யவும்.

3. குறிப்பாக சமூக மட்டத்திலும் பொதுவாக உலகலாவிய ரீதியிலும் வீட்டு வன்முறைச் சம்பவங்களின் பரம்பல் பற்றிய கலந்துரையாடலை நடத்துக (உளவியல், உடலியல், பால் மற்றும் வேறு வகையானவை)

**இலகுபடுத்துனர் குறிப்பு:** வீட்டு வன்முறைகளின் தீவிரம் பற்றி விளங்கவைப்பதற்குத் தகுந்தவாறு குறிப்பிட்ட பிரதேசம்-நாடு சார்ந்த தரவுகளுடன் (அளவுசார் மற்றும் பண்புசார்) தயாராக இருக்கவேண்டும். இங்கு இலகுபடுத்துனர் குறிப்பிட்ட காலப்பகுதியில் வெளிவந்த வீட்டு வன்முறைகள் சார்ந்த பத்திரிகைச் செய்திகள் பெண்கள் நிறுவனங்களின் அறிக்கைகள் போன்றவற்றை ஒரு போஸ்டர் வடிவில் கூட தயார் செய்து காட்சிப்படுத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு - 11

## பயிற்சி: வீட்டு வன்முறைகளின் விளைவுகள்

**நேரம் : 125 நிமிடங்கள்**

**நோக்கம்:** வீட்டு வன்முறைகளை ஏனைய வன்முறைகளோடு ஒப்பிடுவதோடு அதனுடைய விளைவு களை உணர்ந்துகொள்ளல்.

**செய்முறை :**

1) பங்குபற்றுனர்களை எழுந்தமானமாக இருவர் இருவராக சோடிகளாக்கவும். பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைகளின் தாக்கத்தைப் பற்றிக் கலந்துரையாடுமாறு கேட்டுக்கொள்ளவும். குறிப்பாக வீட்டு வன்முறையால் பாதிக்கப்படும் பெண்ணிற்கு ஏற்படக் கூடிய உடல், உள மற்றும் பாலியல் ரீதியான தாக்கங்களை ஆராயுமாறு கேட்கவும். இது செயற்பாடு 5 ஒத்தது - அதாவது பங்குபற்றுனர்களது தனிப்பட்ட அனுபவங்களைப் பகிர்தலை ஒத்தது என்பதை பங்குபடுத்துனர்களுக்குத் தெளிவுபடுத்துக. (அடுத்த படிகளை விடக் கூடிய நேரம் இந்தப்பகுதிக்கு வழங்கவும்)


2) அந்தவகையில் மேற்படி அடையாளம் காணப்பட்ட விளைவுகளை வழங்கப்பட்டுள்ள அட்டைகளில் எழுதுமாறு கேட்டுக்கொள்க.

3) அடுதத்தாகத் தமது குடும்பத்தில் மற்றும் சமூகத்தில் காணப்படுகின்ற பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைகளின் தாக்கங்களை கலந்துரையாடுமாறு பங்குபற்றுனர்களைக் கேட்டுக்கொள்ளவும். அந்தத் தாக்கங்களையும் அட்டைகளில் எழுத வேண்டும்.

4) பங்குபற்றுனர்களை 2-3 பாரிய குழுக்களாகப் பிரிக்கவும். பின்பு போஸ்டர் கடதாசிகளைக் கொடுக்கவும். பின்னர் அக் கடதாசிகளில் பெண்ணின் தோற்றத்தை வரைந்து அதில் தனிப்பட்ட தாக்கத்தை உடம்பிலும், குடும்பத்தில் ஏற்படும் தாக்கத்தை உடம்பைச் சுற்றிலும், சமூகத்தில் ஏற்படும் தாக்கத்தை வெளி வட்டத்திலும் ஒட்டுமாறு கூறவும். மேலும் குழுக்கள் மேற்படி போஸ்டரை அளிக்கை செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளவும். (படம் 4 ஐப் பார்க்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**படம் 4**

1) செயற்பாடு 5 (ஆண்கள் மீதான வன்முறையின் தாக்கம்) இன் மூலம் தயாரான ஒரு போஸ்டர்களில் ஒவ்வொன்றை எடுத்துக்கொள்ளுமாறு ஒவ்வொரு குழுவினருக்கும் கூறவும். மேலும் தற்போது தயாரான படத்துக்கும் செயற்பாடு 5 இன் படத்துக்குமான ஒப்பீட்டை பின்வரும் அடிப்படையில் செய்யுமாறு கேட்டுக்கொள்ளவும். (1) பொதுவான தாக்கங்களை அடையாளமிடல் மற்றும் (2) இரு படங்களுக்குமிடையே காணப்படும் ஏனைய தாக்கங்கள் பொதுவானதா இல்லையா என்பதை அடையாளம் காணல். பொதுவான தாக்கங்களுக்கு ஒரு பொதுவான குறியீடும் வித்தியானமானவற்றிற்கு சிவப்பு புள்ளடிகளும் இட்டு காட்டுமாறு கேட்கவும்.

2) சுவர்களில் போஸ்டர்களைக் காட்சிப்படுத்தக் கூறவும். குழுவைச் சேர்ந்த ஒருவர் தமது குழு அளிக்கையுடன் அளிக்கையாளராக நிற்க வேண்டும்.

1) பின்னர் ஒவ்வொரு குழுவினரையும் ஏனைய குழுவினரின் படங்களைப் பார்வையிடுமாறும் அவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்து ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் குறிப்பிட்ட குழுவின அளிக்கையாளருடன் கலந்துரையாடுமாறும் கேட்டுக் கொள்ளவும்.

2) கலந்துரையாடல் - வெவ்வேறுபட்ட மட்டங்களில் நடைபெறும் வீட்டு வன்முறைகளின் விளைவுகள் பற்றி பங்குபற்றுனர்களுடன் கலந்துரையாடுக. பின்வரும் கேள்விகளின் துணையோடு கலந்துரையாடலை நகர்த்திச்செல்க. (அ) ஒவ்வொரு தனிப்பட்டவரினதும் வலியும் மனக்காயமும் ஆணுக்கு வேறு பெண்ணுக்கு வேறாகக் காணப்படுமா? (ஆ) சமூகத்தின் முக்கிமான ஒரு பகுதியினர் (பெண்கள்) வீட்டு வன்முறையின் வலியினால் துன்பப்படுவதை நியாயப்படுத்த முடியுமா? (இ) பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பயமளிக்கும் வகையிலாக வீடுகளை வைத்திருத்தலை நியாயப்படுத்த முடியுமா? (ஈ) வீட்டு வன்முறை தவறென உணர்த்தக் கூடிய வகையில் கலந்துரையாடலை நகர்த்தக கூடிய சிந்தனைகளைத் தூண்டக் கூடிய பிற கேள்விகளையும் முன்வைக்கலாம்.

**இலகுபடுத்துனருக்கான குறிப்பு:** இப் பயிற்சியானது நீண்ட பயிற்சியாகக் காணப்படுவதால் படிமுறை 4 இற்கும் 5 இற்குமிடையே சிறு இடைவேளை அல்லது சிறு புத்துணர்வளிக்கும் விளையாட்டு ஒன்றை செயற் படுத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாள் 03

**செயற்பாடு - 12**

**கலந்துரையாடல்: வீட்டு வன்முறைகளை தடுப்பதற்கான அல்லது நடவடிக்கை எடுப்பதற்கான கட்டமைப்புக்கள், பொறிமுறைகள்.**

**நேரம்: 30 நிமிடங்கள்**

---

**நோக்கம்:** தமது சமூகப் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கட்டமைப்புக்கள், பொறிமுறைகள் தொடர்பாக பங்குபற்றுனர்களுக்கு தெரிந்துள்ளவற்றைத் தொகுத்தல்.

**செயன்முறை:**

1) பின்வரும் கேள்விகளை, கேள்விகளுக்கான பதில்களைப் பற்றிச் சிந்திக்குமாறு பங்குபற்றுனர்களைக் கேட்டுக்கொள்ளவும்.

- வீட்டு வன்முறைகளைத் தடுக்கக்கூடிய ஏதாவது உள்ளூர் பொறிமுறைகள் பற்றி அறிந்துள்ளீர்களா? அதாவது சமயரீதியான, கலாச்சார ரீதியான, சமூக விழுமியங்கள் - நடைமுறைகள் சார்ந்த விடயங்கள்.

- வீட்டு வன்முறைகளைத் தடுக்கக்கூடிய ஏதாவது உள்ளூர் பொறிமுறைகள் பற்றி அறிந்துள்ளீர்களா? அதாவது அரச, அரச சார்பற்ற நிறுவன

- வன்முறையற்ற வாழ்வு வாழவதற்கான பெண்களது உரிமைகள் பற்றிய சர்வதேச, தேசிய சட்டங்கள், பொறிமுறைகள் மற்றும் கட்டமைப்புக்கள் பற்றி அறந்துள்ளீர்களா?

2) கலந்துரையாடலும்தொகுப்பும்: பங்குபற்றுனர்கள் அனைவரும் தங்களது கருத்துக்களை பொதுவான குழுவில் பகிர்ந்துகொள்வதற்கு ஊக்கப்படுத்தப்படல் வேண்டும். பங்குபற்றுனர்களால் பகிரப்பட்ட ஒவ்வொரு விடயத்தையும் அதனுடைய நியாயப்படியான நிலை மற்றும் நடைமுறை சாத்தியம் சார்ந்து கலந்துரையாடவும். கீழ்வரும் அட்டவணை போன்று தயாரித்து கலந்துரையாடப்பட்ட விடயங்களை உரிய நிரலில் குறிப்பிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | வீட்டு மட்டத்தில்(குடும்பம்) | சமூக மற்றும் மாவட்டமட்டத்தில் | தேசிய மட்டத்தில் | சர்வதேச மட்டத்தில் |
|---|---|---|---|---|
| வீட்டு வன்முறையைத் தடுத்தல் | சமமான கவனிப்பும் கணவன் மனைவிக்கிடையேயான புரிந்துணர்வும். | சமய / அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங் களினால் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு நிகழ்வுகள். | பொருத்தமான சர்வதேச பொறிமுறைகளை உறுதிப்படுத்துதல் / ஏற்றுக் கொள்ளுதல் | சமத்துவம் சார்ந்த ஐக்கிய நாடுகள் சபையின் ஆவம், CEDAW, DEVAW |
| | இளைஞர்களையும் யுவதிகளையும் சமத்துவம் சார்ந்த எண்ணக் கருக்களை ஊட்டுதல் ஒருவருக்கொருவர் மதிப்பளிக்கச் செய்தல். | | முறையான தேசிய சட்டங்களை ஆக்குதல் உதாரணம் வீட்டு வன்முறைச் சட்டம்மற்றும் அதனை அமுல்படுத்தலைஊக்குவித்தல் | |
| | | | ஊடக ஊக்குவிப்பு | |
| வீட்டு வன்முறைகளை அடையாளப்படுத்துதல் | | வீட்டுவன்முறைச் சட்டத்தின் அடிப்படையில் அவற்றை கண்காணிக்கப் பொறுப்புடைய பொலிஸ் மற்றும் உள்ளூர் அரச உத்தியோகத்தர்கள் | | |
| | | உதாரணம் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான பெண்கள்செயற்பாட்டுக் குழு. | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு - 13

## அளிக்கை: வீட்டு வன்முறைகளைத் தடுப்பதற்கான தேசிய மற்றும் சர்வதேசப் பொறிமுறைகள்.

**நோக்கம் :** வன்முறையற்ற வாழ்வு வாழ்வதற்கான பெண்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தற்பொழுதுள்ள நடைமுறைகளை அறிதல்.

**படி முறை :**

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச ஒப்பந்தங்கள் தொடர்பில் ஒரு நாட்டிற்கு இருக்கவேண்டிய கடமைகள் பற்றி பங்குபற்றுனர்களுக்குத் தெளிவுபடுத்துக. ஊநுனுயுறு ஐ விளங்கப்படுத்துவதோடு இலங்கை அதை முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளதையும் விளங்கப்படுத்துக. தற்போது நடைமுறையிலுள்ள பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பொறுப்புக் கூறக்கூடிய உள்நாட்டு பொறிமுறைகளையும் கட்டமைப்புக்களையும் பற்றி விளக்கமளிக்க.

பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமைகள், மனித உரிமைகள், பெண்களுக்கெதிரான வன்முறைகள் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுக்கும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாகவும் அவர்களது சேவைகள் தொடர்பாகவும் அறிமுகம் செய்க. (அது போன்ற நிறுவனங்களிலிருந்து சில உத்தியோகத்தர்களை அழைத்து அவர்களூடாக அறிமுகம் செய்தலும் சாத்தியமானது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு - 14
**பயிற்சி: வீட்டு வன்முறைகளைத் தடுப்பதற்கான செயற்பாடுகள்.**
**நேரம்: 135 நிமிடங்கள்.**

**நோக்கம் : வீட்டு வன்முறைகளுக்கான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் தடுத்தலுக்கான செயல்ரீதியான சில முன்னெடுப்புக்களை மேற்கொள்ள பங்குபற்றுனர்களை ஊக்குவித்தல்.**

**படி முறை :**

1) மூன்று குழுக்களாகப் பங்குபற்றுனர்களைப் பிரித்து அவர்களுக்கு அவர்களுடைய பகுதிகளிலேயே இடம்பெற்ற வீட்டு வன்முறைச் சம்பவக்கதையொன்றை வழங்கவும். இந்தச்சம்பவத்தில் இடையீடு செய்வதற்கும் தடுப்பதற்கும் அவர்கள் என்ன செய்யலாம் என்பதை யோசிக்குமாறு கேட்டுக்கொள்ளவும்.

2) அதன்பின் பங்குபற்றுனர்களை குழு 1 குடும்பம், குழு 2 சமூகம் மற்றும் குழு 3 சேவை வழங்குனர்களுக்கான பாத்திரங்களை ஏற்றுக்கொண்டு ஒரு 7 - 10 நிமிட நாடகத்தைச் செய்யுமாறு கேட்கவும். அவ்வாறு வடிவமைக்கப்படும் நாடகமானது அவ் வன்முறையை உடன் நிறுத்துவதற்கும் நிரந்தரமாகத் தடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை காட்டுவதாக அமையும். முதற் குழு குடும்பஅங்கத்தவர்களாக எவ்வாறு வன்முறையை நிறுத்தலாம் என்பதையும் (நேரடியான அல்லது ஏனைய உறவினராக), இரண்டாம் குழு வெவ்வேறு சமூக அங்தக்கதவர்களாக எவ்வாறு குறிப்பிட்ட வன்முறையை தடுக்கலாம் என்பது பற்றியும் (அயலவர் பெண்கள், ஆண்கள், சமயத்தலைவர்கள், ஆசிரியர்கள் போன்ற..), மூன்றாம் குழு சேவை வழங்குனர்களாக எவ்வாறு குறிப்பிட்ட வன்முறையை தடுக்கலாம் (அரச-அரசசார்பற்ற) என்றும் காட்ட வேண்டும். (45 நிமிடங்கள்)

3) நாடக அளிக்கை: ஒவ்வொரு குழுவும் தங்களது அளிக்கையை முறையே குடும்பம், சமூகம், சேவை வழங்குனர்கள் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் நிகழ்த்த வேண்டும். ஒரு குழு நிகழ்த்துகையை மேற்கொண்டிருக்கும் போதே ஏனைய குழுவிலுள்ள நபர்கள் தமது பாத்திரங்களின் அடிப்படையில் எந்த இடத்தில் தாங்கள் இடையீடு செய்யலாம் என்பதைச் சிந்திக்குமாறு கேட்டுக்கொள்ளவும். (forum theatre - உரையாடல் அரங்கு முறைமையைப்பாவித்தல்).

4) மூன்று குழுவும் தமது அளிக்கையை முடித்த பின் குழு 1 (குடும்பம்) இடம் மீண்டும் தமது அளிக்கையை நடாத்துமாறு கேட்கவும். அவ்வாறு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது ஏனையவர்களை அந்த நாடகத்தில் சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான இடத்தில் இணைந்து கொண்டு வன்முறைக்கெதிரான தலையீட்டை செய்யலாம் எனக் கூறவும். ஒவ்வொரு பாத்திரமாக இணைய விடுவது குழப்பங்களைக் குறைக்கும். இந்தப்பயிற்சியை நகைச்சுவையாக மாற்றாது இயலுமான அளவு உண்மையான அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளும் விதமாக வழிநடத்த வேண்டும்.

o வன்முறையாளர், வன்முறைக்குட்படுபவர் அல்லது வன்முறையைத் தடுப்பதற்கு உதவுபவர் ஆகியோர் தமது தமது இடையீடு செய்யும் பாத்திரத்தை மிகவும் உறுதியாகச் செய்யவேண்டும்.

o பாத்திரதாரர்கள் தமது சிந்தனையில் உண்மையான சமூக அங்கத்தவர்களையும் சந்தர்ப்பங்களையும் வைத்துக்கொண்டு தமது பாத்திரங்களைச் செய்ய வேண்டுவதோடு, உண்மையாக நிகழத்தக் கூடிய மாற்றங்களுக்காக முயல வேண்டும்.

5) கலந்துரையாடல்: வேறு நபர்களது இடையீட்டின் போது வன்முறைக்குட்படுத்தப்பட்டவரதும் வன்முறையாளரதும் மனநிலை எவ்வாறு இருந்தது என்பதைப்பற்றிக் கலந்துரையாடவும். பங்குபற்றுனர்களின் சமூகங்களில் வீட்டுவன்முறையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளின் சாத்தியப்பாடுகள் மற்றும் மேலதிக தேவைப்பாடுகள் பற்றிப் பொதுவாகக் கலந்துரையாடவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலகுபடுத்துனருக்கான குறிப்பு**

நாடகத்தின் ஓட்டத்தை வன்முறைக்குட்பட்டவரின் உரிமைகளை உறுதிப்படுத்தும் விதத்தில் நகர்த்த வேண்டும்.

செயற்பாடு 12 இல் பங்குபற்றுனர்களால் அடையாளப் படுத்தப்பட்ட சாதகமான கலாச்சார நடைமுறைகள், சட்டங்கள், கொள்கைகள், நிறுவனங்கள் போன்ற ஏனைய எல்லாவிதமான சாதகமான பக்கங்களையும் கருத்தில்கொள்ளவேண்டும்.

இந்த செயற்பாட்டில் நாடகத்தை உருவாக்கலும் பாத்திரங்களைப் புதிதளித்தலும் பங்குபற்றுனர்களுக்கு மகிழ்வாகவும் சிரிப்பாகவும் இருப்பினும் இந் நாடகமானது எமது சமூகத்திலுள்ள பல குடும்பங்களின் நிலைமையையும் பெண்களின் வலியையும் பிரதிபலிக்கின்றன என்பதை இடைக்கிடையே ஞாபகப்படுத்துவதோடு இயலுமானவரை இப்பயிற்சியை பிரயோசனப்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளவும்.

**செயற்பாடு - 15**

**பயிற்சி: வீட்டு வன்முறைகளைத் தடுத்தலுக்கான செயற்பாடுகளை திட்டமிடல்**

**நேரம் : 45 நிமிடங்கள்.**

---

**நோக்கம்:** பங்குபற்றுனர்கள் தங்களது சமூகங்களில் காணப்படுகின்ற வீட்டு வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் குறைத்தல் தொடர்பான சில சாத்தியமான செயற்பாடுகளைத் திட்டமிடுதல்.

**செயன்முறை:**

1) முன்னைய பயிற்சியின் குழுக்களிலேயே இணைந்து கொள்ளுமாறு பங்குபற்றுனர்களைக் கேட்டுக் கொள்ளவும். பங்குபற்றுனர்களை அவர்கள் ஒரு சமூக அங்கத்தவர் என்பதைக் கருத்தில்கொண்டு பின்வரும் வகையில் சிந்திக்குமாறு கேட்டுக்கொள்ளவும்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 வன்முறைகள் நடைபெறும் போது எவ்வாறு அவற்றுக்கான நடவடிக்கை எடுக்கலாம்,

 எவ்வாறு வீட்டு வன்முறைகளைத் தடுக்கலாம். அவ்வாறு அவர்கள் சிந்திக்கும் போது ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட நாடகத்திலிருந்தான செயற்பாடுகளையும் சிந்திக்கலாம் அல்லது வேறு பொருத்தமான செயற்பாடுகளையும் சிந்திக்கலாம். ஆயினும் அவை சாத்தியமானவையாக இருக்கவேண்டும்.

2) சிந்தித்தவற்றை வழங்கப்பட்ட துண்டு அட்டைகளில் சுருக்கமாக எழுதும்படி கேட்கவும்.

3) பங்குபற்றுனர்களை ஒரு பொது வட்டமாக்கவும். பின்பு அவர்கள் முன்மொழிந்த செயற்பாடுகளை பின்வரும் அட்டவணையில் வகைப்படுத்தவும். விரிவான செயற்பாடுகள், காலவரையறை மற்றும் தேவையான உதவிகள் என்பவற்றைக் கலந்துரையாடலின் மூலம் பெற்று அட்டவணையை நிரப்பவும். இங்கு சில உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

| | செயற்றிட்டம் | விரிவான படிமுறைகள் | கால வரையறை | எதிர்பார்க்கப படும் வெளி உதவிகள். |
|---|---|---|---|---|
| வன்முறைகளை அடையாளப் படுத்துதல் | அவசரகாலத் தில் செயற் படுவதற் கான உள்ளூர் செயற்பாட்டுக் குழுவை உரு வாக்க குதல் | - அங்கத்தவர் களைத் தெரிவ தற்கான ஆரம்பக் கூட்டம். அங்கத தவர்களுக்கான பயிற்சிகள். அவர்களைச் செயற் பாடு களுக்கு அறிமுகப் படுத்துதல். | | உ+ம்: கிராமத் தலைவர்கள். அரச சார்பற்ற நிறுவன வளவாளர்கள் |
| வன்முறை களைத் தடுத்தல். | பிரச்சாரங்கள் | வீதி நாடகங்கள். | | அரங்கப் பயிற்சியா ளர்கள். |
| | சமயம் | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. (பங்குபற்றலுடனான கலந்துரையாடல்) நிறைவு செய்த திட்டத்தை அதாவது அட்டவணையை அனைவருக்கும் அளிக்கை செய்வதோடு. அவதானமாக அதைச் சரிபார்த்து தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளவும். மேலும் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதும் தொடர்பாக பங்குபற்றுனர்களது ஈடுபாட்டைப்பற்றி கலந்துரையாடவும். (ஈடுபாடு தொடர்பாகக் கட்டாயப்படுத்த வேண்டியதில்லை)

2. தங்களுடைய சமூகம் சார்ந்து யார் இந்த வரைபை - திட்டத்தை ஏற்றுக்கொள்வது என்பதைத் தீர்மானிக்குமாறு பங்குபற்றுனர்களைக் கேட்கவும். பங்குபற்றுனர்களில் ஒருவரை திட்டத்தை எடுத்து தங்களால் தெரிவு செய்யப்பட்டவரிடம் வழங்குமாறு கேட்டுக்கொள்ளவும்.


**செயற்பாடு - 16**

இப் பயிற்சிப் பட்டறைக்கு ஒத்துழைப்பும் வழங்கியமைக்கும் சிறந்த ஈடுபாட்டைக் காட்டியமைக்கும் பங்குபற்றுனர்களுக்கு நன்றியைத் தெரிவித்து பயிற்சிப் பட்டறையை நிறைவு செய்துகொள்ளவும். (10 நிமிடங்கள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org